பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 21 செவ்வாய்க்கிழமை 05.01.2021 கதிர் 61


### இனி து ரகசியம் அல்ல!

'எல்லாம் சிவமயம்' என்பர் சைவ பக்தர்கள். ஆனா இலங்கை மக்களோ எல்லாம் படை மயம்' என்று கூறும் நிலைமை. அது குறித்து நேற்றும் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன். இப் போது புதிய தகவல் ஒன்று. பயிர்ச் செய்கை பக்கம்02

# பருத்தித்துறை இளைஞர் ஒருவருக்குக் கொரோனா; மந்திகை வைத்தியசாலையின் 07ஆம் வார்ட் முடக்கம்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.வடமராட்சி, பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட புலோலி தெற்கைச் சேர்ந்த இளைஞர் (வயது 25) ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையின் 7ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்று வந்தபோதே அவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து மந்திகை ஆதார வைத்தியசாலையின் 07ஆம் இலக்க வார்ட் நேற்று மாலையிலிருந்து முடக்கப்பட்டுள்ளது.

குறித்த தொற்றாளர் கடந்த மூன்று நாள்களுக்கு முன் மருதனார்மடத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தகத்துக்குச் சென்றிருந்தார் எனவும், அங்கு குடிதண்ணீர் வாங்கிக் குடித்தார் எனவும் சுகாதாரத் துறையினருக்கு அவர் பக்கம் 02

### கோட்டா அரசை மண்கவ்வச் செய்ய

# சஜித் - ரணில் அணிகள் ஒன்றிணையும் அறிகுறி

## பேச்சுக்குத் தயார் என ஐ.தே.க. பகிரங்க அறிவிப்பு



எதிர்வரும் தேர்தல்களில் ஒன்றிணைந்து போட்டியிடுவது குறித்து சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார். 02

# வல்வெட்டித்துறை மீனவர் மீது இந்திய மீனவர்கள் அராஜகம்!

★ வாள் முனையில் தாக்குதல்
★ படகு இயந்திரம் அடித்து உடைப்பு
★ மீன்கள் பறிமுதல்





(ந.லோகதயாளன்)

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் மீது இந்திய மீனவர்கள் வாள் முனையில் மேற்கொண்ட தாக்குதலில் படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையில் இருந்து நேற்றுமுன்தினம் பக்கம் 02

## யாழில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 6 பேருக்குக் கொரோனாத் தொற்று



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நேற்று ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உள்ளிட்ட 6 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ். பக்கம் 02


### வகுப்புத் தடை விதிக்கப்பட்ட

## கலைப்பீட மாணவர்களுக்கு உள்நுழைவுத் தடை நீக்கம்!!

(எஸ்.நிதர்ஷன்)

உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்றுக் காலை முதல் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த உள்நுழைவுத் தடை மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக பக்கம் 02

## மாணவர்களை நேற்று இரவு சந்தித்தார் துணை வேந்தர்



உணவு ஒறுப்பில் ஈடுபட்டிருந்த யாழ் பல்கலை மாணவர்களை நேற்றிரவு 10 மணியளவில் நேரில் சென்று சந்தித்தார் துணைவேந்தர் சிறிசற்குணராஜா. பக்கம் 02



## வாழைச்சேனையில் கிளைமோர் குண்டு!

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை - முல்லை நகர் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட கிளைமோர் குண்டு ஒன்றைப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். பக்கம் 02






### இலங்கை வந்த இங்கிலாந்து வீரர்

## மொயின் அலிக்கு கொரோனா



இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுலா மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொயின் அலிக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பக்கம் 02

## மேலும் இருவர் சாவு; கொரோனா காவு 215

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

71 மற்றும் 86 வயதுடைய ஆண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்தவர்களாவர். பக்கம் 02

## நேற்றும் 467 பேருக்கு கொரோனாத் தொற்று

### 45 ஆயிரத்தைக் கடந்தது மொத்தப் பாதிப்பு

இலங்கையில் நேற்றும் 467 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 41 ஆயிரத்து 498 பேருக்கு பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
யில் படைப் புழுவின் (fall army worm) தாக்கத்துக்கு எதிராகப் போராடுவது குறித்து ஆராய்வதற்காக ருவாண்டாவில் இருந்து அந்நாட்டு மேஜர் ஜெனரல் தலைமையில் ஒரு குழு வந்தமை குறித்து நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தச் சேனைப் பயிர்ச்செய்கை பாதிப்புக்களைப் பார்வையிடுவதற்காக அநுராதபுரம் பகுதிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரில் சென்றமையை அடுத்து மேற்படி ருவாண்டா அணி அவசர அவசரமாக இரண்டொருநாள் குறுகிய கால அழைப்போடு கொழும்பு வந்திருந்தது.

அது போல், அந்த அநுராதபுர 'விசிட்'டின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கெப்பிற்றிக்கொலாவ பகுதிக்கும் சென்றிருந்தார். அதனால் இப்போது இன்னொரு புதிய பிரச்சினை கிளம்பியிருக்கின்றது.

அந்தப் பிரச்சினை குறித்து இலங்கை ஆசிரியர்களுக்கான தொழிற்சங்கம் அம்பலப்படுத்தியிருக்கின்றது.

கெப்பிற்றிக்கொலாவ, வவுனியா பகுதியில் சிவில் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 80பேர் பாடசாலைக் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கின்றனர். அது போதாது என்று அப்பிரதேசத்தில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களுக்கு விமானப் படையைச் சேர்ந்தோரை பணியாற்ற ஜனாதிபதி பணித்திருக்கின்றாராம்.

மருத்துவத்துறை மாவட்ட ரீதியாக இராணுவ வளையத்துக்குள் மெல்ல மெல்ல வளைக்கப்படுவது போல, கற்பித்தல் துறை விமானப் படைக்குக் கீழ் வரப் போகின்றதோ என்னவோ?

'எல்லாம் படைமயம்' என்ற கோட்பாட்டின் நெருக்குவாரத்தை தென்னிலங்கை சிங்களம் பட்டுழலும் நேரம் நெருங்கிவிட்டது என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

★ ★ ★

அரசியல் வாதிகள் பலரும் எங்கு பேசுகின்றோம், ஏது பேசுகின்றோம் என்பதை அடிக்கடி மறந்துவிடுகின்றார்கள் போலும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையின் கூட்டம் நேற்று மாலை 4 மணிக்கு மாவிட்டபுரத்தில் உள்ள அதன் அலுவலகத்தில் நடைபெற்றது. அந்தக் கிளையின் தலைவர், கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசாதான்.

அங்கு கருத்து வெளியிட்ட அவர் என் பெயரையும் இழுத்து சில விடயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஓரிரு மாதத்துக்கு முன்னர், 'காலைக்கதிர்' இதழில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

*"தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் ஒன்றுபட்டு உழைப்பதற்காகவும் துறை சார் ஆலோசனைகள், நிபுணத்துவ உதவிகளை வினைத்திறன் மிக்கதாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் தமிழர் தேசிய சபை ஒன்றை அமைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் தேசிய சபையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், துறை சார் நிபுணர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், புலம்பெயர் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள், அறிஞர்கள், பொருளாதார வல்லுநர்கள் மற்றும் ஜஸ்மின் சூகா, நவநீதம்பிள்ளை போன்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்குவதற்குத் தீர்மானித்திருக்கின்றோம்."* – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். – என்ற சாரப்பட அந்தச் செய்தி அமைந்திருந்தது.

அந்தச் செய்தி வெளியானமையை அடுத்து, நவநீதம்பிள்ளை, ஜஸ்மின் சூகா போன்ற இருவரிடமிருந்து மாவை தரப்புக்கு அழைப்புக்கு மேல் அழைப்பு. தங்களுடன் கலந்து பேசி அனுமதி பெறாமல் தங்கள் பெயர்களை 'வெற்று வேட்டு' அரசியல் முழக்கத்துக்கு அவர் பயன்படுத்தியமையால் கடுப்பாகிப் போன இருவரின் அலுவலகமும் கொதித்தெழுந்தன. எனினும் மாவையைச் சூழவிருந்த சிலர் சமாளிப்புக் கடிதங்கள், விளக்கங்களைக் கொடுத்து இருவரையும் தாஜா பண்ணி விவகாரத்தை அடக்கி விட்டனர். அதனுடன் மாவையின் 'தமிழர் தேசிய சபை' யும் செத்துப் போய்விட்டது. விடயமும்அடங்கிவிட்டதுஎன்றுவிட்டுவிட்டோம்.

நேற்று அதனை மீண்டும் கிழறி எடுத்துத் தம் தலையில் மண் வாரிக் கொட்ட அவர் தயாராகியிருக்கின்றார். காங்கேசன்துறைக் கிளைக் கூட்டத்தில் அவரின் பேச்சு அப்படித்தான் அமைந்தது.

தான் அப்படிப் பேசவே இல்லை என்று அங்கு அடித்துக் கூறிய மாவையர், நான் அப்படி ஒரு செய்தியை தெரிந்தோ, தெரியாமலோ வெளியிட்டு தமக்கு நல்லது செய்திருக்கின்றேன் என்று கூறினார். அப்படி 'காலைக்கதிர்' செய்தி வெளியிட்டமையால் ஜாஸ்மின் சூகா, நவநீதம்பிள்ளை எல்லாம் தன்னுடன் உரையாடும் வாய்ப்பு ஏற்பட்டது என்றும், வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த எனக்கு நன்றி கூறவேண்டும் என்றும் சொன்னாராம்.

நல்லது, 'டான்' தொலைக்காட்சியின் 'ஸ்பொட் லைட்' நிகழ்ச்சியில் அவர் கூறியவை என்ன என்பதை விலாவாரியாகப் பார்ப்போம். ஜஸ்மின் சூக்கா மற்றும் நவநீதம்பிள்ளைக்கு அவர் எழுதிய சமாளிப்புக் கடிதத்தையும் எடுப்போம்.

நான் நல்லது செய்தேனா? முன்னுக்குப் பின் முரணாகக் கூறும் நிலைமை யாருக்கு வந்தது? விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்று சமாளிப்பது யார்? – என்ற உண்மை எல்லாம் தெளிவாகும்.

தாம் சமரசம் பண்ணி, சமாளித்து முடித்து வைத்த விடயத்தைத் திரும்பிக் கிளறி எடுத்திருக்கிறார் மாவையர். இதில் உண்மை விடயத்தை விவரமாகப் பின்னர் பார்ப்போம்.

– மின்னல் –

## யாழில் ஒரே குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 641பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது. இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 6 பேருக்கும், வவுனியாவைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவருக்கும் (வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது), வவுனியா பொது வைத்தியசாலையில் ஒருவருக்கும், (தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்தவர்), அளவெட்டியில் 3 பேருக்கும் (ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்), மானிப்பாயில் ஒருவருக்கும், நவாலியில் ஒருவருக்குமே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## சஜித் - ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
'பொய்களைத் தோற்கடித்து ஒன்றிணைந்து பணியாற்றுவோம்' என்ற தொனிப்பொருளில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் குறித்து, 'பொய்களைத் தோற்கடித்து, ஒன்றிணைந்து பணியாற்றுவோம்' என்ற கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதன்போது, நாட்டு நலனைக் கருத்தில்கொண்டு எதிர்கால தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைந்து செயற்படுவதன் சாத்தியங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன எனவும் ருவான் விஜேவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## வாழைச் சேனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இராணுவப் புலனாய்வுத்துறையினருக்குக் கிடைக்க இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனைப் பொலிஸார், சித்தாண்டி இராணுவ முகாம் அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் ஆகியோரின் உதவியுடன் குறித்த வீதியில் காணப்பட்ட கிளைமோர் குண்டை அவ்விடத்தில் இருந்து அகற்றியுள்ளனர்.

மேற்படி கிளைமோர் குண்டு அந்த இடத்தில் யாரால் மறைத்து வைக்கப்பட்டது என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த வீதியின் அருகாமையில் உள்ள வெற்றுக்காணியில் கடந்த போர்க்காலத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்துக்கான பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த காணியினுள் தற்போது கட்டடம் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மொயின் அலிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இங்கிலாந்து கிரிக்கெட் அணியினர் நேற்றுமுன்தினம் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்த நிலையில், அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தநிலையில், மொயின் அலிக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கையின் தனிமைப்படுத்தல் ஒழுங்கு விதிகளுக்கமைய அவர் தனிமைப்படுத்தப்பட்டு, மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவருடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணியவராக கிறிஸ் வோக்ஸ் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதனால், கிறிஸ் வோக்ஸும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலைப்பீட மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நடைமுறைக்கு வரும் வகையில் விலக்கிக் கொள்ளப்படுகின்றது எனத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா அறிவித்துள்ளார் என்று சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் கலாநிதி எஸ். ராஜ் உமேஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்வதற்காகவும், மாணவர்களின் நலன் கருதியும் துணைவேந்தருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

துணைவேந்தரின் இந்த முடிவு பற்றி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் வகுப்புத் தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்றுக் காலை முதல் யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரர்ஆலயநுழைவாயலில்உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்து நேற்று இரவிரவாகத் தொடர்ந்தனர்.

சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் கலாநிதி எஸ். ராஜ் உமேஸ், மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் எஸ்.ஜங்கரன், பல்கலைக்கழக சட்ட நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் எஸ். கண்ணதாசன் மற்றும் ஒழுக்காற்று அதிகாரி பி. ஹஜந்தன் ஆகியோர் நேற்று நேரில் சென்று துணைவேந்தரின்முடிவைமாணவர்களுக்கு அறிவித்தனர். உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறும் மாணவர்களிடம் அவர்கள் கேட்டுக்கொண்டனர். இதன்போது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் ஆகியோரும் உடனிருந்தனர்.

இந்த முடிவை ஏற்றுக்கொள்வதற்கு மாணவர்கள் பின் நின்றனர். எனினும், துணைவேந்தரின் இந்த நடைமுறை முரண்பாடுகளுக்குத் தீர்வாக – சிறந்த திறவுகோலாக அமையும் என்றும், தொடர்ந்தும் பிரச்சினைகளை வளர்த்துக்கொள்ளாமல் நடைமுறைகளைப் பின்பற்ற மாணவர்கள் முன்வர வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## நேற்றும் 467...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
வைரஸ் தொற்றியுள்ளது.

இதேவேளை, நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்து 242 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 37 ஆயிரத்து 817 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 210 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## பருத்தித்துறை இளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வழங்கிய தகவலில் தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை அவர் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு நேற்றுமுன்தினம் முன்னெடுத்த பி.சி.ஆர். பரிசோதனையில் மாதிரிகளை மீளப் பெறுமாறு அறிக்கையிடப்பட்டது.

எனினும், நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவரது குடும்ப உறுப்பினர்களைச் சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கைகளைச் சுகாதாரத்துறையினர் முன்னெடுத்துள்ளனர்.

## வல்வெட்டித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மீன்பிடிக்கப் புறப்பட்ட அப்புலிங்கம் அமிர்தலிங்கம் (வயது 46) என்ற மீனவர் இலங்கைக் கரையில் இருந்து 11 மைல் தொலைவில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை அப்பகுதிக்கு வந்த 3 இந்தியப் படகுகள் மீனவரின் படகைச் சுற்றிவளைத்துள்ளன. இதன்போது இரு படகுகள் பாதுகாப்பு வழங்க மற்றைய படகில் இருந்த 4 இந்திய மீனவர்களில் மூவர் இலங்கை மீனவரின் படகில் ஏறி குறித்த மீனவரின் கழுத்தில் வாள் வைத்து அச்சுறுத்தி தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட மீனவர் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன் இலங்கை மீனவரின் படகில் இருந்த மீன்கள் அனைத்தும் பறிமுதல் செய்ததுடன் ஜி.பி.எஸ் கருவியையும் பறித்து எடுத்துச் சென்றுள்ளதுடன் கைத்தொலைபேசியையும் பறித்து கடலில் வீசியுள்ளனர். அதேவேளை, படகின் இயந்திரத்தையும் அடித்து உடைத்துள்ளனர் என்றும் பாதிக்கப்பட்ட மீனவர் தெரிவித்துள்ளார்.

அடிகாயங்களுக்கு இலக்கான இலங்கை மீனவர் கரை திரும்பி வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்பின்னர் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் .

இந்த விடயங்கள் தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என வடமராட்சி மீனவர் சங்க சமாசத் தலைவர் வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன் இந்த அராஜக சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளருக்கு வடமராட்சி மீனவர் சங்கம் எழுத்தில் முறையிட்டுள்ளது.

## மாணவர்களை நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், தன்னால் வழங்கப்பட்ட உள் நுழைவுத் தடையைத் தன்னால் விலக்கிக் கொள்ள முடியும், ஆனால் பீடச் சபையினதும், பேரவையினதும் தீர்மானங்களை மாற்றும் அதிகாரம் தனக்கு இல்லை என்பதை அவர் உண்ணாவிரதமிருந்த மாணவர்களுக்குத் தெரிவித்தார்.

உள் நுழைவுத் தடை விலக்களிப்பு என்ற வாய்ப்பை மாணவர்கள் திறவுகோலாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## மேலும் இருவர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 215 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 202 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் தவிசாளர் தெரிவு தொடர்பான நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகின்றது தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

## அதன் தலைவர் ஐங்கரநேசன் விளக்க அறிக்கை



நல்லூர்ப் பிரதேசசபையின் புதிய தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பங்காளிக் கட்சியான ரெலோவின் உறுப்பினர் கு. மதுசுதன் வேட்பாளராக நிறுத்தப் பட்டிருந்தார். ஆனால், தவிசாளர் தா. தியாகமூர்த்தி தங்களின் பங்கா ளிக் கட்சியான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோதும் அவரை வீழ்த்தித் தான் தவிசாளராக வேண்டும் என்ற நோக்கில் இவர் இரண்டு தடவையும் பாதீட்டைத் தோற்கடிப்பதற்குத் தீவிரமாகச் செயற்பட்டிருந்தார். எமது உறுப்பினர்கள் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் பாதீட்டைத் தோற்கடித்துத் தனக்கு ஆதரவை வழங்குமாறு கேட்டிருந்த இவர், பாதீடின்போது அதற்கு ஆதரவாகவே வாக்களித்திருந்தார். இதனாலேயே, அரசியல் அறத்தின் பாற்பாட்டு இவருக்கு எம்மால் வாக்களிக்க முடியாமற் போனது என்று தமிழ்த் தேசியப் பசுமைஇயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நல்லூர்ப் பிரதேச சபைத் தேர்தலில் புதிய தவிசாளர் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதுதொடர்பாகத் தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் நிலைப்பாடுபற்றி பொ. ஐங்கரநேசன் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

ஜனநாயக ரீதியாகப் பதவியொன்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒருவரை அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயினும் வலுவான காரணங்கள் எதுவும் இல்லாமல் அரசியல் காழ்ப்பின் காரணமாகக் கவிழ்க்கக்கூடாது என்பது தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் உறுதியான நிலைப்பாடு ஆகும். அதன் அடிப்படையில் ஏனைய எதிர்க்கட்சிகள் யாவும் ஓரணியில் நிற்பதால் பாதீடு தோற்கும் என்று தெரிந்திருந்தும் பாதீடுக்கு ஆதரவாகவே நல்லூர்ப் பிரதேசசபையில் உள்ள தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் இரண்டு உறுப்பினர்களும் இரண்டு தடவைகளும் வாக்களித்தார்கள். வடக்கு மாகாணசபையில் விவசாய அமைச்சர் பதவியை நான் துறந்தபோது இதற்கான நெருக்கடிச் சூழலை ஏற்படுத்திய தரப்பிலிருந்தே, முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன் அவர்களைப் பதவி விலக்கக் கோரும் நம்பிக்கையில்லாத் பிரேரணையில் என்னைக் கையெழுத்திடுமாறு கேட்டுக்கொண்டதோடு, என்னைப் பதவி விலகவேண்டாம், அமைச்சராக நான் பதவியைத் தொடரலாம் என்றும் தெரியப்படுத்தியிருந்தார்கள். இந்த இழி செயலை நான் செய்ய விரும்பாததோடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆதரவாகக் கையெழுத்தும் இட்டிருந்தேன். இந்தச் சம்பவத்தை கு. மதுசுதன் அவர்களை ஆதரிக்குமாறு என்னைக் கேட்ட தரப்பினர்களிடம் நான் சுட்டிக் காட்டியிருந்ததோடு, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களிடமும் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவர்களிடமும் பொருத்தமான பிறிதொரு வேட்பாளரை நிறுத்தினால்எமதுஆதரவைவழங்குவோம் என்றும் தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால், பாதீட்டைத் தோற்கடிப்பதற்கு ஒத்துழைத்ததைப் போல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கையினாலோ அல்லது வேறு காரணத்தினாலோ வேட்பாளரை மாற்றுவதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. நல்லூர்ப்பிரதேசசபைத் தேர்தல் 2018இல் நடைபெற்றபோது எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடனேயே தமிழரசுக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. இதன்போது, இந்த அணிக்கு எதிராக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செ. கஜேந்திரன் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் எமது கட்சியின் கருத்தியலின் அடிப்படையிலும் வெற்றி, தோல்வி பற்றிச் சிந்திக்காது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிறுத்திய வேட்பாளருக்கே ஆதரவு தெரிவித்திருந்தோம்.

ஆனால், ஜனநாயக ரீதியாகக் தா. தியாகமூர்த்தி தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் அவருக்கு எமது உறுப்பினர்கள் பூரண ஒத்துழைப்பை எப்போதும் வழங்கி வந்துள்ளார்கள். இப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாதீட்டைத் தோற்கடிப்பதற்குக் காரணமாக அமைந்தவரே வேட்பாளராக நிறுத்தப்பட்டதால் சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரான ப. மயூரனுக்கு அவர் வெல்லுவாரா, தோற்பாரா என்ற கணிப்பீடு எதுவுமின்றி அறத்தின்பாற்பட்டு எமது உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள். புதிய தவிசாளராகப் பதவியேற்றுள்ள அவர் கட்சி முரண்பாடுகளைக் கடந்து சேவையாற்ற வேண்டும் எனவும் சபையின்உறுப்பினர்கள் மீளவும் ஒருதடவை பாதீட்டைத் தோற்கடிக்காது மக்கள் நலன் சார்ந்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம். தனிப்பட்ட அரசியல்வாதிகளை விடக் கட்சிகளின் நலன் முக்கியமானது. கட்சி களின் நலனைவிட மக்களின் நலன் முதன்மையானது. இந்நலன்கள்யாவும் அரசியல் அறத்தின்பாற்பட்டவையாக இருத்தல் வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தொடர்ந்தும் பயணிக்கும். - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 05.01.2021 | செவ்வாய்க்கிழமை |
| --- | --- |
| 04.00 - 04.55 | தரம் - 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 கணிதம் (த)(1ஆம். 2ஆம்)<br>தரம் - 08 விஞ்ஞானம் (த)(2ஆம். 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 கணிதம் (த)(1ஆம். 2ஆம்)<br>தரம் - 09 விஞ்ஞானம் (த)(1ஆம். 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 கணிதம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 புவியியல் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 புவியியல் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 புவியியல் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 கணிதம் (த) (1ஆம். 2ஆம்)<br>தரம் - 07 விஞ்ஞானம் (த) (2ஆம். 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 பௌதிகவியல் (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 பௌதிகவியல் (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 கணிதம் (த) (1ஆம். 2ஆம்)<br>தரம் - 06 விஞ்ஞானம் (த) (2ஆம். 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 அரசியல் விஞ்ஞானம் (த) |

## வலி.வடக்கு பிரதேசசபை எல்லைக்குள் கோழி உரித்து இறைச்சி விற்கத் தடை!

யாழ்ப்பாணம், ஜன.05

யாழ்ப்பாணம்–வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கோழி இறைச்சி விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பொது சந்தைகளில் மாத்திரமே கோழிகளை உரித்து இறைச்சியாக்கி விற்பனை செய்ய முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஏனைய பகுதிகளில் உரித்து இறைச்சி விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டு உள்ளதாகவும் அது எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமெனவும் சோ. சுகிர்தன் கூறியுள்ளார்.

இந்த விதிமுறைகளை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## புத்தாண்டு கடமைகளில் எதிர்க்கட்சி அலுவலகம்

சஜித் பிரேமதாஸவின் தலைமையில் திங்கட்கிழமை காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் புத்தாண்டில் தமது கடமைகளை ஆரம்பித்தது.

கட்சியின் பொது பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர், அனைத்து இன, மதங்களையும் பாதுகாக்கும் அதேவேளை அனைவரும் நாட்டை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும் எனக் கூறினார்.

மேலும் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றும் மக்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்க ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அத்தோடு தற்போது பொதுமக்கள் கடும் சுமையை கொண்டிருக்கின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=





லக்ஷ்மி வெதுப்பகம்
ஆறுகால் மடம்.
077 218 9718

கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழ்க் கைதிகளின் அவலநிலை

எதிர் எதிர்த் தரப்பினர் எல்லோரும் பேசுகின்றார்கள். அறிவிப்புகள், அறிக்கைகள் விடுகின்றார்கள். ஆனால் விடயமோ ஒப்பேறுவதாகத் தெரியவில்லை.

இன்று அதிகாரத்தில் இருப்போர் எதிரணியில் இருக்கும்போதும் தேர்தலை எதிர்கொண்ட போதும் பேசினார்கள். வலியுறுத்தினார்கள். செய்வோம் என்றார்கள். ஆனால், இன்று அதிகாரத்துக்கு வந்து ஒரு வருடமும் கடந்து விட்டது. எதுவும் நடக்கவில்லை.

இப்படி ஒரு பரிதாபநிலை எந்த விடயத்தில் தெரியுமா? நமது தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில்தான்.

அரசுத் தரப்பிலும், எதிர்த் தரப்பிலும் இருக்கும் தமிழ் எம்.பிக்கள் எல்லோருமே – ஒருவர் விடமாமல் – அந்தக் கைதிகளின் பரிதாப நிலையைப் பரிவுடன் எடுத்துரைக்கின்றார்கள். கேட்போர் கண் கலங்கப் பேசுகின்றார்கள்.

அந்தக் கைதிகளின் சார்பில் வெளியில் இயங்கும் 'குரலற்றோரின் குரல்' அமைப்பும் கனகாத்திரமாகச் செயற்பட்டு பல்வேறு கவனவீர்ப்பு நடவடிக்கைகள், போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. ஆனால் தீர்மானம் எடுப்போரின் – ஆட்சியாளர்களின் – செவிப்பறையை இந்தச் செய்தி உறைப்பாக எட்டுவதாக இல்லை.

பதினைந்து, இருபது ஆண்டுகள் சிறைச் சுவர்களுக்குள் முடங்கிக் கிடக்கும் அரசியல் கைதிகளின் அவல வாழ்வு ஆட்சியாளர்கள் காதில் உறைப்பதாக இல்லை.

தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியம் பேசுவதாகக் கூறும் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவையும் –

அரசுப் பக்கம் நிற்கும் ஈ.பி.டி.பி, சு.க, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியவையும் –

பொதுஜன பெரமுனவின் தமிழ் எம்.பிக்கள், இ.தொ.கா., மனோ கணேசனின் தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தியின் வடிவேல் சுரேஷ் அனைத்துத் தரப்பினருமே இந்த அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தித்தான் நிற்கின்றார்கள்.

ஆனால், தனித் தனிக் குரலாக, அறிக்கைகளாக எதிரொலிப்பதால் அப்படி அறிக்கைகளை வெளியிடும் தரப்புகளுக்கு அரசியல் ஆதாயம் ஏதும் கிட்டினாலும் கிட்டுமே தவிர, தடுப்புக் காவலில் அவலப்படும் தமிழ்க் கைதிகளுக்கு ஏதும் பிரயோசனம் கிட்டுவதாக இல்லை.

அதனால்தான் இந்த விடயத்தில் தமிழ் எம்.பிக்களின் ஒற்றைக் குரல் – ஒருமித்து – எதிரெலிக்க வேண்டும் என்ற அற்புதமான யோசனை ஒன்றைத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா முன்வைத்துள்ளார்.

அவர் குறிப்பிடுகின்றமை போல இந்தக் கைதிகளை 'தமிழ் அரசியல்கைதிகள்' என்று குறிப்பிடுவததா அல்லது 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலம் சிறையில் வாடும் கைதிகள்' என்று அடையாளப்படுத்துவதா எனும் சர்ச்சை தேவையற்றது. என்ன பெயரிலும் அவர்களை அழையுங்கள். ஆனால் அவர்களின் அவல வாழ்வு முடிவுக்கு வந்து அவர்கள் வெளியே வரவேண்டும். அதுதான் தமிழினத்தின் எதிர்பார்ப்பு.

தமக்காக – சொந்த நலனுக்காக – இலங்கையின் சட்டங்களின் கீழ் குற்றமாக வர்ணிக்கப்படும் ஒரு செயலை செய்தவர்கள் அல்லர் அவர்கள். தமிழினத்துக்காக தன்னலம் கருதாது செயற்பட்ட அவர்களின் வாழ்வு சிறைக்குள் முடங்குவது என்பது தமிழினத்தைப் பொறுத்தவரை அதன் வினை; பாவம். அவர்களை விடுவிக்க வைப்பதன் மூலம் அந்தப் பாவ விமோசனத்தை தமிழினம் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தக் கைதிகளின் விடுவிப்புக்காக தமிழ் எம்.பிக்கள் 28 பேரும் ஒன்று சேர்ந்து அரசை வற்புறுத்த வேண்டும் என்ற விடயத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

ஒன்று – இன்றைய நிலையில் 'தமிழ் எம்.பிக்கள்' என்ற இந்தத் தொகுதி ஏன் 'தமிழ்ப் பேசும் எம்.பிக்கள்' என்ற வட்டமாக விரியக் கூடாது என்று ஒரு கேள்வி உள்ளது. ஆனால் தெற்கில் சிங்களவர்கள் – முஸ்லிம்கள் உறவு சீர்கெட்டு வரும் நிலையில் அத்தகைய ஒன்றுபட்ட கோரிக்கை, அரசியல் ரீதியாகத் தமிழ் கைதிகளுக்கு சார்பாகத் தென்னிலங்கையில் எழக்கூடிய பரிவை – பச்சாதாபத்தை – சில சமயங்களில் பாதித்துவிடலாம். எனவே அது குறித்து சிந்தித்துதான் இந்தத் தரப்பு விஸ்தரிப்புப் பற்றி முடிவு செய்ய வேண்டும்.

அடுத்தது – தமிழ் எம்.பிக்கள் பல்வேறு கட்சிகளில், முகாம்களில் இருக்கின்றார்கள். தங்களுக்குள் முரணிலைப்பட்ட அரசியல் நிலைப்பாடுகளை எடுத்துத் தமக்குள் முட்டிமோதிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ்க் கைதிகள் விவகாரத்தில் ஒன்றுபட்டு ஒரு குரலாக ஒலிப்பதற்கான தளத்துக்கு அவர்களை யார் கட்டி இழுத்துக் கொண்டு வருவார்கள்? அந்த இணக்க நிலையை ஏற்படுத்தக் கூடிய தகுதி நிலை யாருக்கு உண்டு?

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்குத்தான் உள்ளவர்களில் வள்ளிசான தகுதி இவ்விடயத்தில் உண்டு. பத்து ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ப் பேசும் எம்.பிக்களின் ஒன்றியத்தை உருவாக்குவது அவசியம் என்று தீர்க்கதரிசனத்துடன் முயற்சி எடுத்தவர் அவர். அது பலித்திருந்தால் பல சிக்கல்களுக்கு அவ்வப்போது பொருத்தமான தீர்வு கிட்டுவதற்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கும். இப்போது இந்த முன்முயற்சியை அவர் ஆரம்பிப்பதே பொருத்தமானது. தமிழ் சமூகத்தின் சார்பில் இந்தக் கோரிக்கை அவருக்குச் சமர்ப்பணம்.

# மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் திலீபன் எம்.பி. நம்பிக்கை தெரிவிப்பு!

நிச்சயமாக மாகாணசபை தேர்தல் நடத்தப்படும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை என வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புகுழுவின் தலைவருமான கு. திலீபன் தெரிவித்தார்.

வவுனியா கருப்பனிச்சான்குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

மாகாணசபை தேர்தல் விரைவில் நடைபெற வேண்டும் என்பதுதான் எங்களது கட்சியின் நிலைப்பாடாகும். அந்த மாகாணசபை தேர்தலிலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பலப்படுத்தம் பட்சத்தில்தான் வடமாகாணம் வளமான மாகாணமாக வரும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

சுதந்திரக் கட்சியினர் ஏற்கனவே இருந்த மாகாணசபையை கூட்டுமாறு தெரிவிப்பது அது அவர்களுடைய கருத்தே தவிர அது முடிவல்ல.

பெரும்பான்மையிலுள்ள அரசில் முக்கிய பதவியில் இருக்கும் எமது அமைச்சர் கூட மாகாணசபை தேர்தலை நடாத்த வேண்டும் என விரும்புகிறார்.

அவருக்கு நல்லதொரு சமிக்ஞை கிடைத்தபடியால்தான் எல்லா கூட்டங்களிலும் மாகாணசபை நடத்தப்படும், நடத்தப்பட்ட வேண்டும் எனக் கூறிவருகின்றார். ஆகவே நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கலாம் மாகாணசபை தேர்தல் நடத்தப்படும். – எனத் தெரிவித்தார்.

# ஹெரோயின் வியாபாரிகள் இருவர் மட்டுநகரில் கைது!





மட்டக்களப்பில் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த ஏறாவூர், செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதிகள் இருவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 3 லட்சம் ரூபா பெறுமதியான 11 கிராம் 200 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் மட்டக்களப்பு நகரில் வைத்து கைது செய்துள்ளமையுடன் இரு ஓட்டோக்களையும் மீட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.கே. பண்டார தெரிவித்தார்.

பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவதினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏறாவூரைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரியிடம் தொடர்பு கொண்டு போதைப்பொருள் வாங்குகின்றமை போல நடித்து அவரை மட்டக்களப்பு திருகோணமலை வீதிக்கு வரவழைத்தனர். இதன்போது ஓட்டோச் சாரதியை மடக்கிப்பிடித்துக் கைது செய்தமையுடன் அவரிடம் இருந்து போதைப்பொருளையும் மீட்டனர்.

அதனைத் தொடர்ந்து அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் அவர் வழங்கிய தகவலுக்கமைய ஏறாவூரைச் சோந்த இன்னுமொருவரை போதைப்பொருள் வாங்கவேண்டும் என அவரையும் வரவழைத்து மடக்கிப்பிடித்தது கைது செய்தமையுடன் அவரிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருளை மீட்டனர்.

அதில் கைது செய்யப்பட்ட இருவரும் ஏறாவூர் மிச்சுநகர், செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதிகள் எனவும் நீண்ட காலமா கப் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவருபவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

# உக்ரைன் சுற்றுலா பயணிகளுக்கு சில தளங்களுக்குச் செல்லத் தடை!

கொழும்பு, ஜன.05

உக்ரைன் நாட்டில் இருந்து, நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளுக்கு, நாட்டில் சில சுற்றுலா தளங்களுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை சீகிரியா மற்றும் பொலன்னறுவை ஆகிய பகுதிகளுக்கு உக்ரைனிலிருந்து வருகை தந்த சுற்றுலா பயணிகள் சென்றிருந்தமையால், உள்நாட்டு சுற்றுலா பயணிகளுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, சிகிரியா மற்றும் பொலன்னறுவை பகுதிகளுக்கு உக்ரைன் நாட்டில் இருந்து, வருகை தந்த சுற்றுலா பயணிகளுக்குசெல்ல ஏற்பாடு செய்திருந்த பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டவர்களுக்காக குறித்த பகுதிகள் திறந்து வைக்கப்பட்டுள்ள காரணத்தினாலேயே இவ்வாறு சுற்றுலா பயணிகளின் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

# தகனப் பிரச்சினை தொடர்பாக ஆராய எந்த குழுவும் நியமிக்கப்படவில்லை!

## அரசாங்கம் திட்டவட்டமாக அறிவிப்பு

கொரோனாவால் உயிரிழந்தவர்களைத் தகனம் செய்வது தொடர்பான விவகாரத்தில் பரிந்துரைகளை வழங்க ஒரு குழுவை நியமிப்பது தொடர்பாக வெளியான செய்திகளில் எந்த உண்மையும் இல்லை என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களைத் தகனம் செய்தல் அல்லது அடக்கம் செய்வது தொடர்பில் ஆராய்வதற்கு ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோ புள்ளே, குழு ஒன்றை நியமித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் கொவிட் – 19 கட்டுப்பாடு எப்போதும் அறிவியலை அடிப்படையாகக் கொண்டனவாக இருக்க வேண்டும் என ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோ புள்ளே குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரத்தில் நோய் கட்டுப்பாடு தொடர்பான முடிவுகளை எடுக்கும்போது மதம், இனம், அரசியல், சமூக மற்றும் புராண நம்பிக்கைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொரோனா தொற்று ஒரு புதிய நோய் என்பதால் உலக சுகாதார அமைப்பின் ஆரம்ப பரிந்துரைகள் மாற்றமடைகின்றன எனவும் இந்நிலையில் இந்த நோய் தொடர்பாக அவ்வப்போது பரிந்துரைகளை வழங்குமாறு நிபுணர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகளிடம் அவர் கேட்டுக்கொண்டார் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா மரண சடலங்கள் தகனம்: வர்த்தமானியில் திருத்தம் செய்யலாம்!

## அனில் ஜாசிங்க ஆலோசனை



கொரோனா தொற்றில் மரணிப்பவர்களின்சடலங்களைதகனம்செய்யவேண்டும் என்ற வர்த்தமானி அறிவிப்பு தற்போதும் நடைமுறையில் இருக்கின்றது.

இருந்தபோதும் குறித்த வைரஸ் தொடர்பில் விஞ்ஞான அடிப்படையிலான தீர்மானங்களின் பிரகாரம் வர்த்தமானியில் திருத்தம் கொண்டுவரலாம் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என சுகாதார சேவை முன்னாள் பணிப்பாளர் நாயகமும் சுற்றாடல் அமைச்சின் செயலாளருமான வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொரோனாவில் மரணிப்பவர்களை தகனம் செய்யவேண்டும் எனத் தெரிவித்து விடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவிப்பு தொடர்பில் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொரோனா தொற்றில் மரணிப்பவர்களின் சடலங்களைத் தகனம் செய்ய வேண்டும் எனத் தெரிவித்து வெளியிடப்பட்ட ஆரம்ப வர்த்தமானி அறிவிப்பு தற்போதும் அமுலில் இருக்கின்றது. கொரோனா வைரஸ் தொற்றில் மரணிப்பவர்களைத் தகனம் செய்யவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது,

இந்த வைரஸ் பரவலின் ஆரம்பத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அன்றைய நிலைமையை கருத்திற்கொண்டு, எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்ற அடிப்படையில் இருந்தே தகனம் செய்ய மட்டும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

என்றாலும் 6 மாதங்களின் பின்னர் வைரஸ் தொடர்பில் வெளிப்படும் நிலைமையின் பிரகாரம், விஞ்ஞான ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு, அந்த தீர்மானத்தில் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்றும் குறித்த வரத்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதன் பிரகாரம் கொரோனா வைரஸ் தொடர்பில் விஞ்ஞான ரீதியிலான தீர்மானங்களை அடிப்படையாகக்கொண்டு, சுகாதார அமைச்சால் இந்த வர்த்தமானியில் திருத்தங்களை மேற்கொள்ளலாம். அத்துடன் கொரோனா தொற்றில் மரணிக்கும் சடலம் தொடர்பாக ஜனாதிபதியுடனும் கலந்துரையாடினேன். – என்றார்.

# கஞ்சா தோட்டம் சுற்றிவளைப்பு!

## மூவர் கைது





தணமல்வில, பொத்துவில் ஆகிய பகுதிகளில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கஞ்சா தோட்டங்கள் சுற்றிவளைக்கப்பட்டு மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

தணமல்வில – கல்கொட்டுகந்த பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பொலிஸ் விசேட அதிரடிப்படையால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக் கைகளின் போது மூன்று கஞ்சாத் தோட்டங்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

இதன்போது முளை நிலை கஞ்சா செடிகள் அடங்கிய இரு தோட்டமும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த தோட்டத்தில் 17 ஆயிரம் கஞ்சாச் செடிகள் பயிரிடப்பட்டுள்ளன என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

அந்த கஞ்சாச் செடிகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டதன் பின்னர் ,அவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேக நபர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். விசேட அதிரடிப்படையினர் சந்தேக நபர்களை மேலதிக விசாரணைகளுக்காக தணமல்வில பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, பொத்துவில் – பத்மிட்டியாவ பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது 4 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட கஞ்சாத் தோட்டம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்த குறித்த தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சாச் செடிகள் அளிக்கப்பட்டுள்ளன.

கஞ்சாச் செடிகளைப் பயிரிட்டவர்கள் எனக் கூறப்படும் நபர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவர்களைக் கைது செய்வதற்காக தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. மேற்படி சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இரு குழுக்கள் இடையே மோதல் தாக்குதலில் சிறுவன் ஒருவன் பலி

அக்கரைப்பற்று பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் போது தாக்கப்பட்டு 15 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

அக்கறைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மோதலின் போதே இவ்வாறு சிறுவனொருவன்உயிரிழந்துள்ளான்எனப்பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குடும்பத் தகராரு காரணமாக இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாறியுள்ளதுடன், இதன்போது சிறுவன் ஒருவன் தாக்கப்பட்டுள்ளான். இதனைத் தொடர்ந்து சிறுவன் அட்டாளைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான் என வைத்தியசாலையின் நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அட்டளைச்சேனை பகுதியைச் சேர்ந்த 15 வயதுடை சிறுவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் சந்தேக நபரைக் கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கொரோனா உயிரிழப்பவர்களின் சடலம் எரிப்பு: நிபுணர் குழு அறிக்கையை பகிரங்கப்படுத்துக!

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் இறுதிக்கிரியை தொடர்பாக சுகாதார நிபுணர் குழு சமர்ப்பித்த அறிக்கையை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் தனது இயலாமையை மறைத்துக்கொள்ள இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


# தேர்தல் ஆணைக்குழு

**வாக்களிப்பதற்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்.**

## தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு - 2020

**பாதியளவில் மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களும் மீள்குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படாத பிரதேசங்களிலும் தேருநர்களைப் பதிவு செய்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான விசேட அறிவித்தல்.**

வட மாகாணத்தின் கீழ்க்காணும் கிராம அலுவலர் பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டின் பதிவுசெய்யப்பட்ட தேருநர்களிற்கிடையே தற்போது உண்மையாக வாழ்கின்றவர்களின் பெயர்களை, 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படுகின்ற தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பப்பத்திரங்களை வடமாகாணத்தில் வதிந்துள்ளவர்கள் வட மாகாணத்தில் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய மாவட்டங்களில் வதிந்துள்ளவர்கள் அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து குறித்த விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இந்த விண்ணப்பப்படிவங்களை www.elections.gov.lk இணையத் தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதி 2021 ஜனவரி 05 ஆம் திகதியிலிருந்து 2021 பெப்ரவரி 01 ஆந் திகதி வரையாகுமென்பதுடன், விண்ணப்பப்பத்திரங்களை பிழையின்றி பூர்த்தி செய்து தாங்கள் தற்சமயம் வதிந்திருக்கும் பிரிவின் கிராம அலுவலரின் பரிந்துரையோடு உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு 2021 பெப்ரவரி 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும்.

மேலும், கீழ்க்காணும் கிராம அலுவலர் பிரிவுகளில் வதிந்திருந்து ஏற்கனவே தொழில்/ கல்வி/ வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளவர்களின் தகவல்களையும் குறித்த விண்ணப்பப்பத்திரத்தில் உட்சேர்த்து அவர்களின் நெருங்கிய உறவினரொருவரால்/ அட்டர்னி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவரொருவரால் கையொப்பமிட்டு 2021 பெப்ரவரி 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும். முழுக் குடும்பமாக வெளிநாடு சென்றிருந்தால் அந்த நபர்களின் விண்ணப்பம் குறித்த நாட்டின் இலங்கைத் தூதுவர் அலுவலகத்தினூடாக 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01ஆம் திகதிக்கு முன் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

| மாவட்டத்தின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் | கிராம அலுவலர் பிரிவின் பெயர் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | தெல்லிப்பளை | J/226 நகுலேஸ்வரம், J/233 காங்கேசன்துறை மேற்கு, J/234 காங்கேசன்துறை மத்தி, J/235 காங்கேசன்துறை தெற்கு, J/238 கட்டுவான், J/240 தென்மயிலை, J/241வருத்தலைவிலான், J/242 குரும்பசிட்டி, J/243 குரும்பசிட்டி கிழக்கு, J/244 வசாவிளான் கிழக்கு, J/245 வசாவிளான் மேற்கு, J/246 மயிலிட்டி வடக்கு, J/248 மயிலிட்டி துறை தெற்கு, J/249 தைட்டி வடக்கு, J/250 தைட்டி மேற்கு, J/251மயிலிட்டிதுறை வடக்கு, J/252 பலாலி தெற்கு, J/253 பலாலி கிழக்கு, J/254 பலாலி வடக்கு, J/255 பலாலி வட மேல், J/256 பலாலி மேற்கு. |
| கிளிநொச்சி | கண்டாவளை | KN 46 ஆனையிறவு |
| | பச்சிளைப்பள்ளி | KN 92 இத்தாவில், KN 93 முகமாலை, KN 94 வேம்போடுகேணி |
| மன்னார் | முசலி | MN 153 முள்ளிகுளம் |

www.elections.gov.lk எனும் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத் தளத்திலிருந்தும் குறித்த விண்ணப்பப்பத்திரத்தை தரையிறக்கம் செய்துகொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம் : 011 – 2868441
மின்னஞ்சல் முகவரி : info@elections.gov.lk
இணையத்தளம் : www.elections.gov.lk

**தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை, இராஜகிரிய,
2021.01.01**

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011 - 2369437 | வவுனியா | 024 - 2222311 |
| கொழும்பு மாவட்ட | 011 - 2369438 | முல்லைத்தீவு | 021 - 2061426 |
| கம்பஹா | 033 - 2222047 | மட்டக்களப்பு | 065 - 2224312 |
| களுத்துறை | 034 - 2222266 | அம்பாறை | 063 - 2224342 |
| கண்டி | 081 - 2233187 | திருக்கோணமலை | 026 - 2222304 |
| மாத்தளை | 066 - 2222422 | குருநாகல் | 037 - 2222369 |
| நுவரெலியா | 052 - 2222325 | புத்தளம் | 032 - 2265246 |
| காலி | 091 - 2234028 | அநுராதபுரம் | 025 - 2222551 |
| மாத்தறை | 041 - 2222305 | பொலன்னறுவை | 027- 2222012 |
| அம்பாந்தோட்டை | 047 - 2256248 | பதுளை | 055 - 2222424 |
| யாழ்ப்பாணம் | 021 - 2222655 | மொணராகலை | 055 - 2276315 |
| கிளிநொச்சி | 021 - 2285664 | இரத்தினபுரி | 045 - 2222023 |
| மன்னார் | 023 - 2222289 | கேகாலை | 035 - 2222561 |

**சரியாகப் பதிவு செய்துகொள்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.**

காலைக்கதிர் Kalaikkathir

## நான் தனது வரைவுக்கு இணக்கம் தெரிவித்தேன் என

# சுமந்திரன் கூறுவது முழுப் பொய்!

**நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் முடிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் பின்வருமாறு கூறியிருந்தார்:-**
***“இதேவேளை, நான் தயாரித்ததாகக் கட்சிகளால் நிராகரிக்கப்பட்ட வரைவு நான் தயாரித்ததல்ல. புலம்பெயர் அமைப்புக்களால் வரையப்பட்டது. அதனை நான் வரைந்தேன் எனக் கருதி இரு கட்சியினர் நிராகரித்து விட்டனர். பின்னர் அதற்கு விக்னேஸ்வரன் ஐயா அனுமதி வழங்கியுள்ளார் என்று மின்னஞ்சல் ஒன்றைப் பார்த்தேன். நான் வரைந்ததாக என்ற நினைப்பில் அந்த வரைவு நிராகரிக்கப்பட்டிருந்தது. அதை நான் வரையவில்லை எனத் தெரிந் ததும் ஏற்றுக்கொண்டதுபோல் தெரிகின்றது. அது ஒருபக்கம் இருக்கட்டும்.”*** **- என்றார்.**
**- அதற்கு இப்போது நீதியரசர் விக்னேஸ்வரன் விளக்கமளித்துள்ளார். அதன் விவரம் இங்கு பிரசுரமாகின்றது.**

கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. தொடர்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

ஐ. நா. மனித உரிமைகள் சபை கூட்டத் தொடர் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தான் தயாரித்து என்னால் நிராகரிக்கப்பட்ட வரைவுக்கு நான் தற்போது அனுமதி அளித்துள்ளேன் என வவுனியாவில் செய்தியாளர்கள் மத்தியில் கூறி இருப்பதாக ஊடகங்களில் படித்தேன். சுமந்திரனின் இந்த கூற்றில் எந்த உண்மையும் இல்லை. இது அப்பட்டமான பொய்.

இந்த வரைவை தான் தயாரிக்கவில்லை என்றும் வேறு யாரோ தான் தயாரித்துள்ளார்கள் என்பதை அறிந்ததும் நான் இணக்கம் தெரிவித்துள்ளேன் என அவர் வேடிக்கையான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது போல இந்த கடித விவகாரம் தொடர்பில் சுமந்திரன் தெரிவித்துவரும் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணாக அமைகின்றன. சுமந்திரன் எனது பார்வைக்காக எனக்கு அனுப்பிய கடிதத்தை தான் வரையவில்லை என்றும் புலம்பெயர் அமைப்பு ஒன்றே வரைந்ததாகவும் கூறிவருகிறார். எது உண்மை, எது பொய் என்பது எனக்கு தெரியாது. ஆனால், இந்த கடிதத்தை எனக்குத் தந்தது சுமந்திரனே. எனக்கு இந்த வரைவைத் தந்த சுமந்திரன் அதனைத் தயாரித்தவர்கள் வேறு யாரோ என்று எதுவும் குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகமில்லை. ‘நாங்கள்’ என்ற பதத்தைப் பாவித்தார் என்றே எனக்கு நினைவு. இந்த வரைவைப் படித்துப் பார்க்கின்ற எவருக்குமே இந்த வரைவின் நோக்கம் அரசாங்கத்துக்கு மனித உரிமைகள் சபையில் முன்னைய தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு மேலும் காலம் வழங்குவதே என்பது புலன் ஆகும். இதில் எந்த மயக்கமும் இருக்க முடியாது. சுமந்திரன் எனக்கு அனுப்பிய வரைவை நான் பகிரங்கப்படுத்தவில்லை. அதற்கு நான் அளித்த பதிலையே பகிரங்கப்படுத்தினேன். இவ்வாறு நான் பகிரங்கப்படுத்தியதனால் தான் அவரது கபடத்தனமான முயற்சி முறியடிக்கப்பட்டது. நான் என் பதிலைப் பகிரங்கப்படுத்தியமை காரணமாக அரசாங்கம் நாம் என்ன செய்கின்றோம் என்று விழித்துக்கொண்டு விட்டது என்று நகைப்புக்கிடமான கருத்துக்களைக் கூறிவருகிறார். உண்மையில் சுமந்திரனின் வரைவு அரசாங்கத்தைக் காப்பாற்றும் ஒரு முயற்சி. இதில் அரசாங்கம் கோபப்பட என்ன இருக்கிறது என்று எனக்கு விளங்கவில்லை. சுமந்திரனின் கருத்துடன் உடன்பட மறுத்து பெரும்பான்மையான புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கூட்டாக ஒரு வரைவைத் தயாரித்து அனுப்பி இருந்தார்கள். அந்த வரைபில் சர்வதேச நீதிமன்றம் (நேரடியாக குறிப்பிடப்படாவிட்டாலும்), நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice), சர்வதேச சுயாதீன விசாரணை போன்ற அடிப்படையான விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்த வரைவுக்கு நான் இணக்கம் தெரிவித்துள்ளேனே தவிர சுமந்திரனின் வரைவுக்கு அல்ல. அதேவேளை, மனித உரிமைகள் சபை ஆணையாளர் மற்றும் சபையின் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பும் பொருட்டு மிகவும் இறுக்கமான ஒரு வரைவைத் தயாரித்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இணக்கம் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

இதேவேளை, வவுனியாவில் நேற்று (ஞாயிறு) நடைபெற்ற கூட்டத்தில் சுமந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோர் மனித உரிமைகள் சபை தொடர்பிலான



பொதுவான வரைவு ஒன்றைத் தயாரிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன். இது நல்ல விடயம். மூன்று கட்சிகளுக்கும் இடையே இது தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுவதற்கு என்னால் ஆன ஒத்துழைப்பை வழங்குவேன். குறித்த வரைவு எது என்று இதுவரையில் தெரியாது. ஆனால், அடிப்படை விடயங்களில் விட்டுக்கொடுப்பதற்கு நான் தயார் இல்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் ஆகியவை சாத்தியம் இல்லை போன்ற கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இவை சாத்தியமோ, சாத்தியம் இல்லையோ பாதிக்கப்பட்ட சமூகம் என்ற வகையில் கிடைக்கின்ற எல்லா வழிகளையும் நாம் முயற்சிக்க வேண்டும். சரிவராது விட்டால் பரவாயில்லை. வெற்றி தோல்விகள் என்னைப் பொதுவாகப் பாதிப்பதில்லை. ஆனால், இவற்றுக்காக முயற்சிப்பது சர்வதேச ரீதியில் நீதிக்கான எமது போராட்டத்தை மேலும் முன்னெடுத்து செல்வதற்கு வலுவான ஓர் அடித்தளத்தை ஏற்படுத்தித் தரும் என்பது எனது நம்பிக்கை.

அதேவேளை, நாம் கடும்போக்கு நிலையில் நின்றால், ஐ. நா மனித உரிமைகள் சபையின்பிடி யில் இருந்து இலங்கை விடு பட்டுபோகும் என்ற அர்த்தம் அற்ற கருத்துக்களையும் நான் நிராகரிக்கின்றேன். நாம் கேட்பது எதுவுமே கடும்போக்கு அல்ல. அவை நீதியின் பாற்பட்ட நியாயமான கோரிக்கைகளே.

இறுதியாக, சுமந்திரன் பொய் கூறுவதை நிறுத்த வேண்டும் என்று அவரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். மூன்று நாட்களுக்கு முன்னர் தான் ரிவியில் அவருக்கும் எனக்கும் இடையில் எந்தவித தனிப்பட்ட பிரச்சினை எதுவும் இல்லை என்றேன். அவருக்கு எனக்கெதிராக ஏதேனும் பிரச்சினை இருந்தால் அதைச் சொல்லட்டும். அதை விட்டு விட்டு பொய் கூற விழையக் கூடாது.

சுமந்திரன் தனது திறமைகளைத் தமிழ் மக்களின் நன்மைகளுக்காக பயன்படுத்தாமல், அரசாங்கங்களின் நன்மைகளுக்காக பயன்படுத்தி வருவதே எனக்கும் அவருக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு காரணமாகும். விரைவில் அவர் இந்த நிலைமையில் இருந்து விடுபட்டு, தனது சொந்த மக்களுக்கு நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதை புரிந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாடு படுவதற்கு முன்வருவார் என்று நம்புகிறேன். அரசாங்கம் தமிழர்களுக்கான தீர்வை புதிய அரசியல் யாப்பினுடாகத் தரும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் செயற்படாமல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பேரில் தன்னை ஆதரித்த மக்களுக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காகவும் உண்மையாக உழைக்க முன்வருமாறு அவரை அன்புடன் வேண்டுகின்றேன். என்று உள்ளது.

## சுமந்திரனின் விளக்கம்



நீதியரசர் விக்னேஸ்வரனின் பிந்திய அறிக்கையை ஒட்டி தனது விளக்கத்தை சுமந்திரன் தெரியப்படுத்தியுள்ளார். அவர் கூறியவை:-

நான் ஒப்படைத்த வரைவு புலம்பெயர் தரப்புகளினால் தயாரிக்கப்பட்டதே.

*“நாங்கள் இதில் தேவையான மாற்றங்களைச் செய்ய முடியும்”* - என்று கூறியே நான் அதனை நீதியரசர் விக்னேஸ்வரனிடம் ஒப்படைத்தேன்.

அந்த வகையில் இன்றளவு வரை சில சொல்லாடல் மாற்றங்களைச் சம்பந்தப்பட்ட தரப்புகள் செய்து கொண்டே இருக்கின்றன. தமக்குக் கிடைக்கின்ற பின்னூட்டல்களுக்கு ஏற்ப அந்த மாறுதல்கள் அவர்களால் செய்யப்படுகின்றன.

நான், நீதியரசர் விக்னேஸ்வரனிடம் ஒப்படைத்த வரைவுக்கும், பின்னர் அவர் ஒப்புக் கொண்ட வரைவுக்கும் சில சொல்லாடல் மாறுபாடு இருக்கலாம். அதைக் கூட அவர் தெரிவித்திருந்தால் அதை நாமாகவே மாற்றுவது குறித்துப் பேசியிருக்கலாம்.

ஆனால், அந்த வரைவு என்னுடையது என்று நினைத்துக் கொண்டு அதனை ஒட்டுமொத்தமாக - அடியோடு - முற்றிலுமாக (In toto) நிராகரிப்பதாகவே அவர் அறிவிப்பு விடுத்திருந்தார்.

பின்னர், அது என்னுடையதல்ல, புலம் பெயர்ந்தோர் தரப்பினுடையது என்பதை அறிந்ததும், ஒரு சில சொல்லாடல் மாற்றங்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவித்து அவர் அதனை ஏற்றுக் கொண்டிருப்பதாக இப்போது கூறுகின்றார். அதனை நாமே பரிசீலித்து மேற்கொண்டிருக்கலாம்.

முதலில் நான் கொடுத்த ஏழு பக்க வரைவை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதாக அறிவித்து விட்டு அதில் செய்த சில சொல்லாடல் மாற்றங்களோடு அவர் ஏற்பதாகக் கூறியிருக்கின்றார்.

இதுதான் உண்மை.

- என்று தெரிவித்தார் எம்.ஏ.சுமந்திரன்.

**ஆசிரியர் குறிப்பு**

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகளையும் சுமந்திரன் அனுப்பி வைத்திருக்கின்றார். அந்த ஆவணம் சம்பந்தப்பட்ட தரப்பால் Googledocs செயலியில் தரவேற்றம் செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அதனைக் கையாளும் அனைவரும் அதில் மாற்றங்களைச் செய்ய முடியும். அவ்வாறு நீதியரசர் விக்னேஸ்வரனிடம் அந்த ஆவணம் ஒப்படைக்கப்பட்டமை முதல் அவர் அதை ஏற்றுக் கொள்வதாகக் கூறிய காலம் வரையான மாற்றங்களுடன் அந்த ஆவணப் பிரதிகளை சுமந்திரன் அனுப்பியுள்ளார்.

அந்த ஆவணங்களின் இரகசியத் தன்மை கருதி அவை வெளிப்படுத்தப்படவில்லை. (ஆ.ர்)

# தீர்க்கதரிசனமும் துணிச்சலும் மிக்க அரசியல் போராளி

## குமார் பொன்னம்பலம்

● ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி





> எங்களுக்குரிய உரிமைகளை அனுபவிக்க யாரிடமும் கைகட்டி நிற்கவோ, கெஞ்சிக்கேற்கவோ வேண்டிய அவசியமில்லை என்று உரக்கக் கூறியவர். தமக்கு உயிர் ஆபத்து இருக்கின்றது எனத் தெரிந்து கொண்டும் சளைக்காது தமிழ் மக்களுக்கு நியாயம் வேண்டிச் செயல்பட்டவர். சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக தன்னந் தனியே குரல் கொடுத்தவர்.

ஈழுத்தமிழர் போராட்ட வரலாற்றில் மறக்கமுடியாத ஓர் அத்தியாயம் மாமனிதர் குமார் பொன்னம்பலம் 2000 ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு. இன்று இருபது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் அவரை தமிழ் பேசும் மக்கள் எளிதில் மறக்க மாட்டார்கள். ஈழத்தமிழர் விடுதலை வேள்வியில் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து உழைத்துச் செயல்பட்டு கொண்டிருக்கும் வேளையில் அவரை நாம் இழக்க வேண்டிய துர்பாக்கிய நிகழ்வு ஏற்பட்டது. அவருடைய தந்தையார் உலக மாமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலம் இலங்கை வரலாற்றில் ஒப்பாரும், மிக்காரும் அற்ற வழக்கறிஞர். தமது வழக்குரைக்கும் திறமையை தென்கிழக்கு ஆசியா எங்கும் பதித்த மதியூகி.

தமது ஆங்கில நாவன்மையால் ஐக்கிய நாடுகள், ஸ்தாபனத்தை கலக்கியவர். 1947இல் சோல்பரிகமின் முன் வாதிட்ட விடயங்கள் அனைவராலும் பாராட்டப்பட்டன. ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் சிங்கள மேலாதிக்கம் எப்படி தொழிற்படும் என்பதை உணர்ந்து தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்ற கோசத்தை முழங்கச் செய்தார். சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையை கொணர்ந்தவர். அதே வழியில் சட்டத்துறையிலும், அரசியலிலும் செயற்படுவதற்கு தமது புத்திரர் குமார் பொன்னம்பலத்தையும் வழிநடத்தினார்.

### தந்தை ஜீ.ஜீக்குப் பின்னர் கட்சியைப் பொறுப்பேற்றார்

அமரர் குமார் பொன்னம்பலம் தந்தையார் மறைந்த பின் தமிழ் காங்கிரஸ் கட்சியை பொறுப்பேற்று வளர்த்தெடுத்தார். புகழ்பெற்ற வழக்கறிஞர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றதோடு பாரிஸ்டர் பட்டமும் பெற்றார். இவர் தமிழ் மக்களின் துயர் துடைப்பதற்காக பல வழக்குகளில் வாதாடி வெற்றி பெற்றார். செம்மணி புதைகுழிகள் பற்றிய செய்திகள் வெளிவருவதற்கு காரணமாக இருந்த கிருஷாந்தி பாலியல் வல்லுறவு வழக்கு, மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலைகள் சம்பந்தப்பட்ட விசாரணைகளின் போது கொடுமைகள் புரிந்த இலங்கை இராணுவத்திற்கு எதிராக வாதிட்டு பல உண்மைகளை வெளிக் கொணர்ந்தவர்.

### துணிச்சலுடன் களமிறங்கிய அரசியல், சட்டப் போராளி

1996இல் பயங்கரவாத தடை சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் வழக்குகளை ஆஜராகுபவர்கள் பயங்கரவாதிகள் என்று மகுடம் சூட்டப்பட்ட வேளையில் தாம் தமிழீழவாதி எனக்கூறி எவ்வித லாபமும் கருதாமல் வழக்காடியவர் குமார் பொன்னம்பலம். அதுமாத்திரமன்றி சிறைகளில் வாடும் பிஞ்சு உள்ளங்களுக்கு குமார் அண்ணை எங்களை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் ஊட்டியவர்.

1983 ஆம் ஆண்டு நாட்டை உலுக்கிய பயங்கர வன்முறை தமிழ் மக்களினது வாழ்க்கை நிலை குலையலைத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் காணாமல் போவதும் அதிகரித்தன. சித்திரவதைகளும், பாலியல் வல்லுறவுகளும், கொலைகளும் சாதாரணமாக நடைபெறத் தொடங்கின. பயங்கரவாத எதிர் நடவடிக்கை என்று தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட உரிமை மீறல்களை தட்டிக்கேட்க யாரும் முன்வரவில்லை. அவற்றுக்காக நீதிமன்றத்தில் வாதாடி நியாயம் பெற்றார். பேரினவாதிகளின் எதிர்ப்புகளை செவிமடுக்காது. கொழும்பில் தமது குடும்பத்துடன் வாழ்ந்துகொண்டு சிங்கத்தின் குகையிலிருந்து உறுமிய புலி போல செயற்பட்டார். ஏனைய சட்ட வல்லுநர்கள் போல் வசதியாக, ஆடம்பரமாக வாழ நினைத்திருந்தால் வாழ்ந்திருக்கலாம். அதை விடுத்து எந்நேரமும் ஈழத்தமிழ் மக்களை சிந்தித்து நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாவிடினும் வெளியே சிறப்பாக செயலாற்றினார்.

### உண்மைகளை அம்பலப்படுத்தியவர்

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் இனப்பிரச்சினையின் உண்மைச் சொரூபத்தை, தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் அடக்கு முறைகளை வெளிப்படுத்தலிலும் பெரும் பங்காற்றியவர். சர்வதேச அளவில் நடைபெறும் மனித உரிமை மாகாநாடுகள், கருத்தரங்குகள் பலவற்றில் கலந்து கொண்டு தமது சிறந்த ஆங்கில புலமையூடாக புள்ளி விபரங்களோடு இனப்பிரச்சனைகளின் பல்வேறு பரிமாணங்களையும் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தினார். இதன் காரணமாக அதிகார சக்திகளின் பலத்த கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கு, அச்சுறுத்தலுக்கும் ஆளானார். அதிகாரப் பீடத்தை மட்டுமல்ல, அதற்குப் பக்க பலமாக இருந்த தமிழ் கட்சிகளையும் அவர் கடுமையாக சாட்டினார். எங்களுக்குரிய உரிமைகளை அனுபவிக்க யாரிடமும் கைகட்டி நிற்கவோ, கெஞ்சிக்கேற்கவோ வேண்டிய அவசியமில்லை என்று உரக்கக் கூறியவர். தமக்கு உயிர் ஆபத்து இருக்கின்றது எனத் தெரிந்து கொண்டும் சளைக்காது தமிழ் மக்களுக்கு நியாயம் வேண்டிச் செயல்பட்டவர். சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக தன்னந் தனியே குரல் கொடுத்தவர். சில சில்லறை அரசியல் செய்வோர் மிகுந்த பாதுகாப்புடன் நடமாடிய போதும் அவர் எவ்வித பாதுகாப்பும் இன்றி செயல்பட்டவர்.

எதிர்காலத்தில் நிலஅபகரிப்புக்கள் தமிழ் மக்களில் உரிமைகள் படிப்படியாகப் பறிபோகும் நிலை போன்ற பல ஆபத்துக்கள் இருப்பதை தீர்க்கதரிசியாக சொல்லி வந்தவர். அனைவரும் துணிவாக செயல்பட வேண்டும் என்று கூறிய தீர்க்கதரசி. நீதிக்காகவும், சமாதானத்திற்காகவும், சமூக விடுதலைக்காகவும் உயிருக்கும் அஞ்சாது தம்மையே அர்ப்பணித்த அவரது வாழ்வு சிறப்பானது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் துணைத்தலைவராக இருந்து சிறிது காலம் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம், அமரர் குமார் பொன்னம்பலம் ஆகியோரின் அரசியல் பங்களிப்பை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். அவரது குடும்பத்திலிருந்து அடுத்த தலைமுறை மூன்றாம் தலைமுறையால் மக்களுக்கும் இந்நாட்டுக்கும் செய்யப்பட போன்ற அரசியல் பங்களிப்பு என்னதென்பதை தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாஸாக்கள் தகனம் செய்யப்படுவதற்கு எதிராகக் கிளிநொச்சியில் போராட்டம்!




முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்படுகின்றமைக்கு எதிராக கிளிநொச்சியில் எதிர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கடந்த (ஞாயிற்றுக்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில், ஜனாஸாக்களை எரிப்பதற்கு எதிராக கோசங்கள் எழுப்பப்பட்டுள்ளமையோடு, பதாதைகளும் ஏந்தப்பட்டுள்ளன.

இந்தப் போராட்டத்தில், பொது அமைப்புக்கள், அரசியல்வாதிகள் மற்றும் மதத்தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மட்டக்களப்பில் கன மழை பல பகுதிகள் வெள்ளத்தில்!





மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கன மழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டுதினங்களாகப் பெய்துவரும் இடியுடன் கூடிய கடும் மழை காரணமாகதாழ்நிலங்கள்நீரில்மூழ்கியுள்ளன.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட நொச்சிமுனை, நாவற்குடா, வேலூர், கூழாவடி, மாமாங்கம், குமாரபுரம், புன்னைச்சோலை, இருதயபுரம், கறுவப்பங்கேணி, பாரதி வீதி, எல்லை வீதி உட்பட பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் பலர், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளமையைக் காணமுடிகின்றது.

இதேநேரம் படுவான்கரையின் பல பகுதிகளில் வெள்ள அபாயம் காணப்படுவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போரதீவுப்பற்று, பட்டிப்பளை, வவுணதீவு, ஏறாவூர்ப்பற்று, கிரான் பிரதேச செயலகப்பிரிவுகளிலும் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை யேற்பட்டுள்ளது.

## சுற்றுலா இடங்களுக்கு உள்நாட்டவருக்கு தடை!

### வெளிநாட்டவர் வருகையால்

இலங்கையின் பல இடங்களுக்கு உக்ரைன் நாட்டு சுற்றுலா பயணிகள் திங்கட்கிழமை முதல் பயணம் செய்யவுள்ளமையால், குறித்த பகுதிகளுக்குச் செல்ல உள்நாட்டு பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் நாட்டு சுற்றுலா பயணிகள் கடந்த 28 ஆம் திகதி இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர் என்பதோடு, திங்கட்கிழமை சுற்றுலா குழுவினர் பொலன்னறுவைக்குச் சுற்றுலா செல்லவுள்ளனர்.

பொலன்னறுவை சுற்றுலா பகுதிகளான பராக்கிரமபாகு மாளிகை, தளதா முற்றம், சிவன் ஆலயம் இல – 02, ரண்கொன் வெஹெர, லங்கா திலக விகாரை, கிரி விஹாரை மற்றும் கல் விகாரை ஆகிய பகுதிகளுக்கு அவர்கள் பயணங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இதனையடுத்து, அந்தப் பகுதிகளுக்குச் செல்ல உள்நாட்டு சுற்றுலா பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் செவ்வாய்க்கிழமை அவர்கள் சிகிரியாவிற்கு செல்லவுள்ளமையால் செவ்வாய் நண்பகல் 12 மணி முதல் அங்கு உள்நாட்டு பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்படும் எனவும் மத்திய கலாசார நிலையம் அறிவித்துள்ளது.

## வவுனியா மொத்த வியாபாரச் சந்தையில் பொலிஸார் மும்முரமாக சிரமதான பணி





வவுனியா, ஜன.05

மவவுனியா மரக்கறி மொத்த வியாபாரச் சந்தையில் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் நகரசபை பொதுசுகாதார பரிசோதகர் க. இலங்கேஸ்வரனின் மேற்பார்வையில் இந்த சிரமதானப் பணி இடம்பெற்றிருந்தது.

## கொரோனா தொற்று அச்சுறுத்தல் வவுனியாவில் சில பகுதி முடக்கம்!





விரைவான அன்ரிஜன் பரிசோதனையில் கர்ப்பிணி பெண்ணொருவர், கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா வேப்பங்குளத்தின் சில பகுதிகள் பொலிஸாரால் முடக்கப்பட்டுள்ளன.

வவுனியா வேப்பங்குளம் முதலாம் ஒழுங்கையில் வசித்த கர்ப்பிணிபெண் ஒருவர், வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கு அன்டிஜன் பரிசோதனை கடந்த (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது. அதில் கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து அந்தப் பெண்ணின் இருப்பிடமான வவுனியா வேப்பங்குளம் முதலாம் ஒழுங்கை மற்றும் 2,3,4மற்றும்5ஆம்ஒழுங்கை பகுதிகள் பொலிஸாரால் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளமையுடன், பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அந்தப்பெண்ணுக்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டபோதே தொற்று இருக்கின்றமை தெரியவந்துள்ளது. எனினும் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் இன்னும்கிடைக்கப்பெறவில்லை.

எனினும் அந்தப் பெண் மணி வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். பி.சி.ஆர்.முடிவுகள் கிடைக்கப்பெற்றதும் ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் காண்டீபன் தெரிவித்தார்.

## 2021 ஆம் ஆண்டில் 7 மாவட்டங்களில் எந்தவொரு தொற்றாளர்களும் இல்லை!

நாட்டின் ஏழு மாவட்டங்களில் கடந்த 3 தினங்களில் எந்தவொரு கொரோனா தொற்றாளர்களும் பதிவாகவில்லை என கொவிட்19 தொற்று பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, பதுளை, யாழ்ப்பாணம், கேகாலை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலேயே இந்தத் தினங்களில் எந்தவொரு கொரோனா தொற்றாளர்களும் பதிவாகவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மட்டக்களப்பு, மன்னார், மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தலா ஒருவர் என்ற அடிப்படையில் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் ஞாயிற்றுக்கிழமை அடையாளம் காணப்பட்ட 403 கொரோனா தொற்றாளர்களில் ஆகக்கூடுதலான தொற்றாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

இவர்களில் 77 பேர் நீர்கொழும்பு பிரதேசத்தில் பதிவாகியுள்ளனர். அத்தோடு பல்லன்ஹேன சிறைச்சாலையில் 71தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுள் 5 பெண் சிறைக்கைதிகளும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அதற்கு அடுத்தபடியாக கண்டி மாவட்டத்தில் 96 பேரும் கொழும்பு மாவட்டத்தில் 47 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 44 ஆயிரத்து 774 ஆக அதிகரித்துள்ளது.

குறிப்பாக மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை, பேலியகொடை மீன் சந்தை மற்றும் சிறைச்சாலைகள் ஆகிய கொத்தணிகளுடன் தொடர்புடைய கொவிட் 19 தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 41 ஆயிரத்து 31 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 37 ஆயிரத்து 252 நோயாளர்கள் சிகிச்சைகளின் பின்னர் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து தொற்றுக்கு உள்ளான 7 ஆயிரத்து 309 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பதுடன், இந்த தொற்று காரணமாக இலங்கையில் இதுவரையில் 213 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விமான நிலையங்கள் 22 ஆம் திகதி திறப்பு!

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட அனைத்து வணிக விமானங்களுக்காக ஜனவரி 22 ஆம் திகதி தொடக்கம் விமான நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக அவதானம் செலுத்தி சுகாதார பிரிவுகளின் விசேட கண்காணிப்பின் கீழ் விமான நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், ஜனவரி 22ஆம் திகதியின் பின்னர் நாட்டுக்கு வருவதற்கு அனைத்து வர்த்தக விமானங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பாதுகாப்பு முறைமைகளைக் கடைப்பிடித்து நாட்டை திறக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

# தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம்; நல்ல தீர்வு விரைவில் கிடைக்குமாம்!

## நம்புகின்றரார் சுரேன் ராகவன் எம்.பி.



தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையைப் பொறுத்தவரை நல்லதொரு தீர்வு நிச்சயம் எட்டப்படுமென நம்புகிறார் என வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அரச நாளிதழொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சுரேன் ராகவன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தமிழ் அரசியல் கைதிகள் விடயம் பற்றி நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னரும் கதைத்திருக்கின்றேன்.

வடக்கு மாகாண ஆளுநர் என்ற ரீதியில் அப்போது இருந்த அதிகாரிகளிடம் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகக் கலந்துரையாடி இருக்கின்றேன்.

மேலும், இந்த விடயத்தை முக்கியமானதாகக் கருதுமாறும், அது நல்லிணக்க நடைமுறையை பலப்படுத்தும் என்றும் தெளிவுப்படுத்தி இருந்தேன்.

இது தொடர்பாக நாம் ஒரு நல்ல முடிவை எட்டவிருந்த நேரத்தில்தான் கடந்த வருடம் ஈஸ்டர் தின தாக்குதல் நடந்தது. அதன் பின் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக மீண்டும் பழைய நிலைக்கே திரும்ப வேண்டியதாயிற்று.

எனினும், ஏதாவதொரு வகையில் தீர்வு விரைவில் வரும் என்று நம்புகின்றேன். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கருணாவைச் சந்திக்க கிளிநொச்சிக்கு கூரிய ஆயுதத்துடன் சென்றவர் கைது!

கூரிய ஆயுதத்துடன் கருணா அம்மானைச் சந்திக்க சென்றவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த (ஞாயிற்றுக்கிழமை) முரசுமோட்டை பகுதியில் தங்கியிருந்த கருணா அம்மானை சந்திக்கச் சென்றவரை, கடமையில் நின்ற பொலிஸார் சோதனைக்குட்படுத்தியபோது, அவரிடமிருந்து குறித்த கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கைது செய்யப்பட்டவரிடம் தொடர் விசாரணையில் பொலிஸார் ஈடுபட்டபோது, குறித்த கத்தி மற்றும் அரிவாள் ஆகியவற்றை வயலிற்கு பசளை இடுவதற்காக எடுத்துச் சென்றார் எனவும், திரும்பும் வேளையில் கருணா அம்மானைச் சந்தித்து செல்ல சென்றார் எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

## நாடாளுமன்றத்தில் எதிரணியில் ரத்தன தேரருக்கு முதல்வரிசை!

எமது மக்கள் சக்தி கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் அத்துரலியே ரத்தன தேரருக்கு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் முதல் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எமது மக்கள் சக்தி கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிக்காக ரத்தன தேரர் நியமிக்கப்பட்டார் என தேர்தல்கள் ஆணைக்குழுவால் கடந்த 18 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் சபையில் அவருக்கு எதிர்க்கட்சியில் முதலாவது வரிசையில் 20 ஆவது ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

தற்போது நாடாளுமன்றத்தில் எஞ்சியிருப்பது ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் ஆசனம் மாத்திரமாகும் என்றும் நரேந்திர பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.



கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் சாயி பஜனை தொகுப்பு நூல் 3ஆம் பதிப்பு, கொழும்பு புதுச் செட்டித் தெருவில் அமைந்துள்ள சாயி நிலையத்தில் தத்தாத்ரேயர் ஜயந்தி தினத்தன்று வைபவரீதியாக வெளியிடப்பட்டது. பிரதமரின் இந்து மத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ பாபு ராமச்சந்திர குருக்கள் மற்றும் பிரதமரின் இந்து மத ஆலோசகர் சட்டத்துறைக் கலாநிதி ஜே.எம்.சுவாமிநாதன் ஆகியோர் நூலின் பிரதிகளை சாயி பாபா மத்திய நிலையத் தலைவர் எஸ்.என். உதயநாயகனிடம் இருந்து பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

## கிழக்கு, ஊவா பகுதிகளில் மழை அதிகரிக்கும் வாய்ப்பு!

இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்ட அலை வடிவான தளம்பல் நிலை காரணமாக, நாட்டின் கிழக்கு மற்றும் ஊவா பகுதிகளில் மழை நிலைமை மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் எனவும் அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை, மாத்தளை, நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதால், மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## வவுனியாவில் மேலும் இருவருக்குத் தொற்று!

வவுனியா - பட்டாணிச்சூரில் வசித்த இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா முதலாம் ஒழுங்கையில் வசித்த கர்ப்பிணிப் பெண்ணொருவர், வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கு கொரோனா வைரஸ் உள்ளமை கண்டறியப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று வவுனியா 6 ஆம் ஒழுங்கையில் வசிக்கும் கிளிநொச்சி பொறியியல் பீட மாணவன் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டனர்.

இதனால் பட்டாணிச்சூரை முடக்கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 594 இலங்கையர் நாடு வந்தடைவு!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 594 இலங்கையர்கள் திங்கட்கிழமை காலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி இவர்கள் இலங்கை அரசாங்கத்தின் சிறப்பு அனுமதியுடன் ஒன்பது விமானங்களின் மூலமாகக் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்களில் வேலைவாய்ப்புக்காக குவைத் சென்றிருந்த மற்றும் பல்வேறு துன்புறுத்தல்களால் இலங்கைக்குத் திரும்ப முடியாத 376 இலங்கையர்கள் திங்கள் காலை இரண்டு இலங்கை ஏர்லைன்ஸ் விமானங்களின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்ததும் விமான நிலையத்தில் அமைந்துள்ள மருத்துவ ஆய்வகத்திலிருந்து இவர்கள் இலவச பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதன் பின்னர் அரசாங்கத்தின் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அவர்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கத்தின் சிறப்பு அனுமதியுடன் இலங்கைக்கு வந்த ஏனைய 218 பேர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் ஊழியர்களால் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் பின்னர் அவர்களையும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக சுற்றுலா ஹோட்டல்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக் காலக்கட்டத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 249 இலங்கையர்கள் ஆறு விமானங்களின் மூலம் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிப் புறப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## தினம் ஒரு விவசாய தகவல்

### நெல்லைச் சுத்திகரிப்பதற்கான உப்பு நீர்ப் பரிகரணம்

நெல்லைக் கீழ்வரும் முறையில் உப்புநீர்க் கரைசலில் பரிகரித்து தரமான விதை நெல்லைப் பெறமுடியும்.



- 100 லீற்றர் கொள்ளக்கூடிய பரல் ஒன்றை எடுக்கவும்.
- பரலினுள் 75 லீற்றர் நீரை நிரப்பவும்.
- கறியுப்பை சிறிது சிறிதாக சேர்க்கவும்.
- முட்டை ஒன்றை கரைசலில் இடவும்.
- 25 சத நாணயக்குற்றி அளவில் முட்டையின் அகலமான பாகம் மேல் நோக்கி படத்தில் காட்டியவாறு மிதக்கும் வரை கறியுப்பை இட்டுக் கரைக்கவும். முட்டை மிதந்ததும் முட்டையை வெளியே எடுக்கவும்.
- பின்னர் நெல்லை இட்டு நன்கு கலக்கவும்.
- மிதக்கும் சப்பிகள் அரைவயிறன்கள், களை விதைகள் ஆகியவற்றை அகற்றவும்.
- நீரினடியில் அமிழ்ந்திருக்கும் நெல்லை எடுத்து தூய நீரில் 2-3 தடவைகள் கழுவிய பின் நிழலில் உலரவிட்டு விதைக்கவும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கைக்கு நாளை வருகின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

## தமிழ்க் கூட்டமைப்புடனும் சந்திப்பு



இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் செவ்வாய் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொள்கின்றார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தை உறுதிப்படுத்தி யுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரில் விஜயம் மேற்கொள்ளும் இந்திய வெளிவிவகார அமைச்சர், எதிர்வரும் 7ஆம் திகதி வரை இலங்கையில் பல்வேறுமட்டப் பேச்சுகளிலும் ஈடுபடவுள் ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு இலங்கைக்கு வரும் முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரியாக இவர் கருதப்படுகின்றார்.

இரு நாடுகளிலும் கொரோனாப் பயணக் கட்டுப்பாடுகளுக்கு மத்தி யில் இந்திய வெளிவிவ கார அமைச்சரின் இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்புக்களையும் வெளிவிவகார அமைச்சர் சந்திக்க வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஜெய் சங்கர் சந்திக் கின்ற விடயத்தை கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்தி ரன் எம்.பி. 'காலைக்கதிர்' பத்திரிகையிடம் உறுதிப் படுத்தினார்.

# கருணாவை கூட்டமைப்புடன் இணைப்பது சாத்தியப்படாது

## சி.வி.கே. சிவஞானம் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

விநாயகமூர்த்தி முரளி தரன் எனப்படும் கருணா வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டன் இணைப் பது என்பது சாத்தியப்படாத ஒரு விடயம்.

- இவ்வாறு வடக்கு மா காண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞா னம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவர் களில் நானும் ஒருவன். நான் அவர்களின் தவறுகளைத் திருத்த வேண்டுமென்றே விமர்சிக்கின்றேன். ஆனால், அவர்களுடனான உறவு இப்போதும் தொடர்கின்றது. எதிர்காலத்தில் அவர்களுடன் பேசுவதற்கும் தயாராக இருக்கின்றோம்' என்று கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், இன்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சிவஞானம்,

கருணா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட விரும்புகின்றார் என்று தெரிவித்தாரே தவிர கூட்டமைப்பு அவரை இணைத்துக்கொள்ளும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை. அவரைக் கூட்டமைப்புடன் இணைப்பது என்பது சாத்தியப்படாத ஒரு விடயம் - என்றார்.

# ஈ.பி.டி.பியிடமும் முன்னணியிடமும் ஆதரவு கேட்டு மாவை எஸ்.எம்.எஸ்.!



(எஸ்.நிதர்ஷன்)

நடந்துமுடிந்த யாழ். மாநகரசபையின் மேயர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட இம்மானுவேல் ஆனோல்ட்டுக்கு ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா குறுஞ்செய்தி மூலம் ஆதரவு கோரியி ருந்தார்.

- இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எனினும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமையும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகாரணமாகஎடுத்த முடிவின் காரணமாக ஆனோல்ட்டுக்கு ஆதரவு வழங்கவில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

# 37,817 பேர் இதுவரை மீண்டனர்!

கொழும்பு, டிசெ. 04

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலை யில் சிகிச்சை பெற்று வருபவர் களில் மேலும் 565 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 817 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 6 ஆயிரத்து 744 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

கொரோனாவால் இதுவரை 213 பேர் உயிரிழந் துள்ளனர்.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு அரசை தமிழ் எம்.பிக்கள் 28 பேரும் சேர்ந்து கோர வேண்டும்

## தமிழ்த் தேசியக் கட்சியின் ஸ்ரீகாந்தா யோசனை



நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெற்றுள்ள அனைத்து தமிழ் எம்.பிக்களும் ஒன்று சேர்ந்து தமிழ் அரசியல் கைதி களின் விடுதலையை வலியுறுத்தி கோரிக்கை ஒன்றை விடுக்க வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழ் அரசியல் கைதிகளின் விடு தலை கோரி பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் சூழ்நிலையில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் இந்த விவகாரத்தில் ஓர் கூட்டான வேண்டுகோளை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க முடியுமானால் ஒருவேளை அது வெற்றியளிக்கக் கூடும்.

வடகிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு மாவட்டம் சார்ந்த தமிழ் எம். பிக்கள் மொத்தம் 28 பேர் பல்வேறு கட்சி களின் சார்பில் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இயல்பாகவே அக்கறை கொண்டிருப்பதை எவரும் மறுத்திட இயலாது. அரசியல் முரண்பாடுகளின் மத்தியிலும் இந்த நிலைமை காணப்படுவதால், ஒரு பொது வேண்டுகோள் தொடர்பில் இவர்கள் அனைவரையும் ஒன்றிணைப் பது சாத்திய மானது.

ஆயினும், தமிழ் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்று அரசாங்கத் தரப்பில் திட்டவட்டமாக கூறப்பட்டு வரும் நிலையில், நீண்ட பலவருடங்களாக சிறையில் வாடும் இந்தத் தமிழர்களின், விவகாரத்தை, பயங்கரவாத தடைச்சட்டத் தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் என்ற அடிப்படையில், இனியாவது அணுகுவது, காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இந்தக் கைதிகள் அரசியல் கைதிகளா என்பதை சர்ச்சை ஆக்கி, விவாதப் பிரதிவாதங்களுக்கு இடமளிக் காமல், இவர்களின் விடுதலையை மாத்திரமே இலக்கா கக் கொண்டு, அதற்காக சாத்தியமான சகல வழிகளிலும் முயற்சிப்பதே பொருத்தமானது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான தமிழ்க் கைதி கள் என்று இவர்களை குறிப்பிடுவதால் எதுவும் இழக்கப்பட்டு விடப்போவதில்லை.

இந்த தமிழ் கைதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் அனைத்துமே அரசியற் பின் னணி கொண்டவை என்ற உண்மை ஒரு போதும் மறுக்கப்பட முடியாது.

உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரின் வார்த்தைகளில் சொல்வதானால், 'ரோஜா மலரை வேறு எந்தப் பெயர் கொண்டு அழைத்தாலும் அதன் நறுமணம் மாறிவிடாது.'

சட்டத்தை பொறுத்தவரையில் இந்தக் கைதிகள் அனைவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக சிறைக்குள் தடுத்து வைக்கப்பட்டிருப்ப வர்கள் என்ற ரீதியில், மனிதாபிமான அடிப்படையில் இவர்கள் அனைவரினதும் விடுதலைக்கான ஒரு பொது வேண்டு கோளில் இணைந்து கொள்வதில், அரசாங்க சார்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட, எந்த தயக்கமும் இருக்க முடியாது.

இப்போது தேவைப்படுவது எல்லாம், தொடர்ந்து மௌனமாகத் துன்பப்படும் இந்த நாதியற்ற தமிழர் களின் விடுதலைக்கான ஆக்கபூர்வமானதும், அர்த்தம் மிக்கதுமான நடவடிக்கைகளே! ஆகவே, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த, சகல தமிழ் எம். பிக்களும் ஒரு கூட்டான கோரிக்கையை சமர்ப்பிப்பது இன்றைய நிலையில் இந்த விடயத்தில் மிகவும் அவசியமானது.

மொத்தம் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக ஒரே குரலில் உரிய கோரிக்கை ஒன்றை ஜனாதி பதியிடம் முன்வைத்தால், அதற்கு உரித்தான கணிப்பினை கருத்தில் கொண்டவராக, அவர் அதனை பரிசீலிக்க வேண்டி இருக்கும். எனவே இந்த நடவடிக்கையை உடனடியாக முன்னெடுக்கும் விதத்தில், தமிழ்க் கைதி களின் விடுதலைக்காக தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கும் 'குரலற்றோர் அமைப்பு' செயலில் இறங்க வேண்டும் என்ற வேண்டுகோளை நாம் விடுக்கின்றோம். நாதியற்ற தமிழ்க்கைதிகளின் விடுத லையை ஓர் புதிய அணுகுமுறையோடு கையாள்வதற்கும், சாதிப்பதற்கும் வழி ஏற்படும் என்ற எதிர்பார்ப்போடு இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

# அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க வேண்டும் அரசு!

## சார்ள்ஸ் எம்.பி. கோரிக்கை



(ந.லோகதயாளன்)

மன்னார், டிசெ. 04

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு முழுமையான கவனம் செலுத்தி அவர்களைச் சிறைச் சாலைகளில் இருந்து விடு விக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தொடர் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கோரிக்கைகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்து வருகின்றனர்.

அவ்வாறான சூழ்நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசு ஆக்கபூர்வமான செயற்பாட்டை இன்று வரை மேற்கொள்ளவில்லை என்பதுதான் எனது கருத்தாக உள்ளது.

அதேநேரத்தில் மிருசுவில் பகுதியில் பொதுமக்களைக் கொலை செய்த இராணுவ அதிகாரியையும், ஆயுதங்க ளுடன் பிடிபட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு பௌத்த குருவையும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள் ளார்.

அப்படியான ஒரு சூழ்நிலையில் இன்று சிறைச்சாலை களில் கொரோனாத் தொற்று மிக வேகமாகப் பரவி வரு கின்றது. அரசியல் கைதிகளின் உயிர்களுக்கு மிகவும் ஆபத்தான சூழ்நிலை இருக்கின்றது.

அவ்வாறான சூழ்நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு இன்னும் மௌனம் காப்பது தமிழர்களுடைய எந்தவிதமான கோரிக்கைகளையும் நிறைவேற்றக்கூடாது என்கின்ற மனோநிலையையே ஜனாதிபதி கொண்டுள்ளார் எனத் தெரிகின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் எழுத்து மூலம் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தோம்.

அவ்விடயம் தொடர்பில் நாளை ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளின் போது பிரதமரைச் சந்தித்து அவர் முன்னெடுத்துள்ள முயற்சிகள் பற்றி கேட்க இருக் கின்றோம்.

உண்மையில் இன்றைய சூழ்நிலை யில் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது அவர்களின் குடும்பங்க ளைப் பொறுத்த வரையில் மிகவும் அவசியமான விட யமாக இருக்கின்றது.

எனவே, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு முழுமையான கவனம் செலுத்தி அவர்களுக்குப் புனர் வாழ்வளித்தாவது விடுவிக்க வேண்டும் அல்லது பிணையிலாவது செல்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# அருவியாற்று அனர்த்தத்தில் தப்பிய 3 கிராம சேவகர்களுக்கும் இடமாற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.05

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் கிராம சேவையாற்றுப் பாலத்தின் அருவியாற்றுப் பாலத்தின் அடியில் வருட இறுதி கொண்டாட்டத்தில் ஈடுபட்ட போது அதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றைய மூவரும் மூன்று திசைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

மதுபோதையில் ஆற்றில் இவர்கள் குளிக்க முற்பட்டனர் எனக் கூறப்படுகின்றது. அப்போது சுழிக்குள் இழுக்கப்பட்டு அள்ளுண்டு சென்ற நிலையில் நான்கு பேரில் மூன்று பேர் மீட்கப்பட்டனர். ஒருவர் உயிரிழந்தார்.

வருட இறுதி கொண்டாட்டத்திற்கு சென்றவர்கள் உயிலங்குளம், வங்காலை, கட்டைக்காடு, முசலி போன்ற இடங்களை சார்ந்தவர்கள் என்றும் ஆற்றில் குளித்த இடத்தில் சமைத்த உணவுகளும், மதுபானங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன எனவும் முருங்கன் பொலிஸார் தெரிவித்தார்கள்.

மீட்கப்பட்ட கிராமசேவையாளர்கள் மூவரும் மன்னார் மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் வீடு திரும்பினர்.

இதேநேரம் அருவியாற்றில் குளிப்பது ஆபத்தானது என்று நானாட்டான் பிரதேச சபையால் அங்கு எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் பொது விடுமுறைநாள் என்பது கிராம சேவகர்களின் கடமையில் விடுமுறை நாள் ஆகாது என்பதோடு பௌர்ணமி தினத்தில் பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்கள் மீது நிர்வாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிர்வாக நடவடிக்கையின் பிரகாரம் மடு, தலைமன்னார், மாந்தை மேற்கு என மூன்று பிரதேச செயலாளர் பிரிவிற்கும் தனித் தனியாக பிரதேச செயலாளர் பிரிவின் இறுதிக் கிராமத்திற்கு இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் அந்த மூவரும் தத்தமது வீட்டில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றருக்கும் அதிக தூரம் தினமும் பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

# இறுதிப் போர் சமயம் வவுனியா வைத்தியசாலையில் உயிரிழந்த பலரின் நகைகள் இன்னும் நிர்வாகத்திடம்

(ந.லோகதயாளன்)

இறுதிப் போர் இடம்பெற்ற காலத்தில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த சிலரது தங்க நகைகள் இன்று வரை வைத்தியசாலை நிர்வாகப் பொறுப்பிலேயே உள்ளன என சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட பல்வேறு நோயாளர்கள் உறவினர் இன்றியே அனுமதிக்கப்பட்டனர். இதன் போது நோயாளர்கள் விடுதியில் தங்க நகைகள் அணிந்திருக்க அனுமதிக்கப்பட மாட்டாது என்ற அடிப்படையில் அவை விடுதி நிர்வாகத்தால் பொறுப்பேற்கப்பட்டன. அச்சமயம் உயிரிழந்தவர்களின் ஆபரணங்கள் உரிய முறையில் அடையாளம் காட்டப்பட்டவை மீள ஒப்படைக்கப்பட்டன.

இருந்தபோதும் பலரது தங்க நகைகள் 11 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்று வரை வவுனியா வைத்தியசாலையிலேயே உள்ளமையினால் இது தொடர்பில் அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அறிவுறுத்துமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கடந்த ஆண்டு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுத்தில் ஓர் கடிதத்தினை அனுப்பியுள்ளார்.

இறுதி யுத்தம் காரணமாக உயிரிழந்தவர்களது உடைமைகளில் வன்னியில் மீட்ட பெருந்தொகை தங்க நகைகள் கிலோ கணக்கில் இன்றுவரை மத்திய வங்கியில் இருப்பிலும் இதே போன்று பாதுகாக்கப்படுகின்றபோதும் அவை மீள ஒப்படைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாகாண சபைத் தேர்தல் குறித்து தீர்மானமில்லை பொருளாதாரத்தை மேம்படுத்தவே அதிக கவனம்!

## காணி அமைச்சர் சந்திரசேன கூறுகின்றார்

கொழும்பு. ஜன. 05

மாகாண சபை தேர்தல் தொடர்பாக அரசாங்கம் தற்போது எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்த அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் – மாகாண சபை தேர்தல் தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்டுள்ளன.

மாகாண சபைக்கு எதிரான போராட்டங்களை அரசாங்கத்துக்கு எதிரான போராட்டமாக மாற்றி விட வேண்டாம் என ஒரு தரப்பினர் குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் அஞ்சாது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகிறது. ஆகவே அரசாங்கம் மாகாண சபை தேர்தல் தொடர்பாக எவ்வித தீர்மானங்களையும் இது வரையில் எடுக்கவில்லை.

மாகாண சபை தேர்தல் தொடர்பில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கத்தால் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அதிக நிதி அவசியமாகும். ஆகவே நெருக்கடியான சூழ்நிலையில் தேவையற்ற செலவுகளைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் எப்போது முடிவுக்கு கொண்டு வரப்படும் என குறிப்பிட முடியாது என்ற காரணத்தால் அதிக நிதி மருத்துவத் துறைக்கும், பொது மக்கள் பாதுகாப்புப் பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# குருநகர் இறங்குதுறையில் உறங்கிய நீர்கொழும்பு நபரால் பெரும் பரபரப்பு

## மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு

(ந.லோகதயாளன்)

நீர்கொழும்பில் இருந்து வந்து குருநகர்ப் பகுதியிலுள்ள இறங்குதுறையில் படுத்துறங்கிய இனந்தெரியாதவரால் அப்பகுதியில் நேற்று பெரும் பரபரப்பு நிலவியது.

நீர்கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் சிங்கள மொழி பேசும் ஒருவர் அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமாகப் படுத்துறங்குவது மீனவர்களால் அவதானிக்கப்பட்டு பொதுச்சுகாதார உத்தியோகத்தர் மற்றும் பொலிஸார் ஆகியோருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு இரு தரப்பும் வருகை தந்தபோதும் இனந்தெரியாதவரை அழைத்துச் செல்ல இரு தரப்பும் மறுத்துவிட்டன. இருப்பினும் சுகாதார உத்தியோகத்தர்கள் உடனடியாக அவரது மாதிரியைப் பெற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பிவைத்த போதும் அவரைக் கைது செய்யப் பொலிஸாரும் மறுத்துவிட்டனர். இதனால் அப்பகுதியின் ஊடாக மீன்பிடிப் படகுகள் செல்வது தடுக்கப்பட்டு பிறிதொரு பகுதியின் ஊடாக அனுமதிக்கப்பட்டது.

பி.சி.ஆர். மாதிரி பெறப்பட்ட நீர்கொழும்பு வாசி பரிசோதனை முடிவு வரும் வரைக்கும் குருநகர்ப் பகுதியில் ஒரு தனியான இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

# மாகாண சபைத் தேர்தல் குறித்து ஆராய்வதற்கும் நிபுணத்துவ குழு!

## நிமல் லன்சா இப்படிக் கூறுகின்றார்

நாட்டின் அபிவிருத்தி மற்றும் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு ஆகியவற்றை மாகாண சபை ஊடாகப் பெற முடியும். மாகாண சபை தேர்தல் தொடர்பாக ஆராய நிபுணத்துவ குழுவை நியமிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கிராம வீதி மற்றும் அடிப்படை வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அத்தனகல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில், மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மாகாண சபை திருத்தம் கொண்டு வரப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள நிலையில், மாகாண சபை தேர்தலும் பிற்போடப்பட்டுள்ளது.

எனவே தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. மக்களின் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபையை நிர்வகிக்க முடியாது. மக்களின் பிரச்சினைகள் மக்கள் பிரதிநிதிகளிடமே தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் பிரதிநிதிகள் இன்றி அதிகாரிகளால் மாத்திரம் அனைத்தையும் செய்ய முடியாது.

அதிகாரிகள் மக்களுடன் இணைவது குறைவு. மக்கள் பிரதிநிதிகள்தான் மக்களுடன் எப்போதும் தொடர்பிலிருப்பர். எனவேதான் மாகாண சபை தேர்தல் நாட்டுக்கு அவசியம்.

நாடாளுமன்றம் கூடும் போது, மாகாண சபை தேர்தல் முறை, திருத்தம், தேர்தல் முறையில் உள்ள குறைபாடு தொடர்பாகக் கலந்துரையாடி, இது தொடர்பாக குழு வொன்று நியமித்து மிக விரைவில் தேர்தலை நடத்த எதிர் பார்க்கப்பட்டுள்ளது. – என்றார்.

# கர்ப்பிணித் தாதிக்குத் தொற்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸார் மூவர் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் கர்ப்பிணித் தாதி ஒருவர் உள்ளிட்ட 22 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அங்கு நேற்று 22 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் நா.மயூரன் தெரிவித்தார்.

# 22 இந்திய மீனவர்களுக்கு எதிரான வழக்கு ஜனவரி 13ஆம் திகதிக்கு

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 26 மீனவர்களையும். எதிர்வரும் 13ஆம் திகதி வரை தொடர்ந்தும் காரைநகர் பாலாவோடை அரச தமிழ் கலவன் பாடசாலையில் இயங்கும் தனிமைப்படுத்தல் முகாமில் கடற்படைப் பாதுகாப்பில் தடுத்து வைத்திருப்பதற்கு ஊர்காவற்றுறை நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் உத்தரவிட்டார்.

இந்த மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. எனினும் தனிமைப்படுத்தலில் உள்ள தமிழக மீனவர்கள் நீதிமன்றுக்கு அழைத்து வரப்படவில்லை.

இவர்களில் 22 பேர் தொடர்பில் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் அவர்களுக்குத் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளன என்று மன்றில் தெரிவிக்கப்பட்டது. ஏனைய நால்வருக்கும் இன்று அல்லது நாளை அப்பரிசோதனைகள் செய்யப்படும் என்றும் கூறப்பட்டது.

இலங்கையின் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக இந்த வழக்கில் முன்னிலையான சட்டத்தரணி செலஸ்ரின், அத்துமீறும் இந்த மீனவர்கள் தொடர்பில் நீதிமன்றம் பரிவுடன் நடந்து கொள்வதால் அவர்களின் அத்துமீறல் வகை தொகையின்றித் தொடர்வதாகச் சுட்டிக் காட்டினார். இந்த மீனவர்கள் விசயத்தில் மன்று கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும், தீவிரமான தண்டனைகள் வழங்க வேண்டும் என வாதிட்டார்.

அது குறித்து எதிர்வரும் 13ம் திகதி ஆராய நீதிமன்றம் முடிவு செய்து வழக்கினைத் தள்ளி வைத்தது.

இந்திய மீனவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் சாளினி, நிரோஷன் ஆகியோர் முன்னிலையாகினர்.



காலைக்கதிர் Kalaikkathir

# ருவாண்டா சிறப்பு தூதுக்குழுவை இராணுவத் தளபதி சந்தித்தார்



கொழும்பு, ஜன.05

வட மத்திய மாகாணம் மற்றும் ஏனைய இடங்களில் பயிரிட்ட சோளத் தோட்டங்களில் படைப் புழுக்களின் வேகமான தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான விஞ்ஞான நிபுணத்துவத்தை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முயற்சியில் ருவாண்டாவிலிருந்து இலங்கைக்கு வந்த சிறப்பு தூதுக்குழுவினர் இராணுவத்தின் ஒருங்கிணைப்புடன் அவர்களின் இரண்டு நாள் சாத்தியக்கூறுகளை ஆராயும் பணியின் முடிவில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தலைமையகத்தில் வைத்து சந்தித்தனர்.

சந்திப்பு தொடர்பில் இராணுவ ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கோரிக்கைக் கமைய 72 மணி நேரத்திற்குள் ருவாண்டாவிலிருந்து விஞ்ஞானிகள், விவசாய வல்லுநர்கள் மற்றும் பூச்சி கட்டுப்பாடு வல்லுநர்கள் அடங்கிய தூதுக்குழு, நல்லெண்ணம் மற்றும் நடைமுறையில் உள்ள இருதரப்பு உறவுகளின் அடையாளமாக, சிறப்பு விமானம் மூலம் கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி நாட்டை வந்தடைந்தனர்.

அங்கு ருவாண்டன் தூதுக்குழுவின் முன் கேள்விக்குரிய அச்சுறுத்தலின் அளவைப் பற்றிய விளக்கக் காட்சிகள் தாக்கல் செய்யப்பட்டன. இதேபோல், ருவாண்டன் வல்லுநர்கள் சோளத் தோட்டங்கள் பெருமளவில் செய்யப்படுகின்ற தங்கள் நாட்டில் பூச்சியைக் கட்டுப்படுத்துவதில் தங்கள் அனுபவங்களை முன்வைத்தனர்.

அனுராதபுரத்தில், தூதுக்குழு எலயபட்டுவ பகுதிக்கு ஒரு களப்பயணத்தை மேற்கொண்டதுடன், அந்த படைப் புழுக்கள் அநுராதபுர பகுதியில் மக்காச்சோள தோட்டங்களை எவ்வாறு தாக்கியுள்ளன என்பதை அவதானித்தனர். அங்கு அவர்களின் கண்டுபிடிப்புகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய ஒரு சுருக்க விளக்கத்தை இராணுவத் தளபதியின் அலுவலகத்தில் வழங்கியதுடன், கடந்த முதலாம் திகதி ருவாண்டாவுக்கு திரும்பியதும் அவர்களால் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னர் அந்த பூச்சிகளின் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவர் என உறுதிப்படுத்தினர்.

# இந்தியாவிடம் அரசு அடிபணிந்துள்ளது!

## ஜே.வி.பி. சாடல்

இந்தியாவுக்கு அடிபணிந்து அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் இரண்டு பிரதான முனையங்களை அரசாங்கம் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் 5 வருட காலத்துக்குள் தாரைவார்த்து விடும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊடக பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் அமைச்சரவை யோசனையை கப்பற்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.

அமைச்சரவை யோசனையில் எவ்விதமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதைப் பொறுப்பான அமைச்சர் கூட அறிந்திருக்கமாட்டார்.

அமைச்சரவை யோசனையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அரசாங்கத்தால் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த முடியுமா என்ற சவாலை முன்வைக்கிறோம்.

கடந்த அரசாங்கம் பிற நாட்டவர்களுக்கு விற்ற தேசிய வளங்களை ஆட்சிக்கு வந்த பிறகு மீளப் பெறுவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் அரசியல் பிரசாரம் செய்தார். ஆனால் தற்போது அரசாங்கம் இந்தியாவுக்கு அடிபணிந்துள்ளது.

தேசிய முதலீட்டாளர்களுக்கு கிழக்கு முனையத்தை வழங்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது. இந்தியாவுக்கு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் அவசியம். ஆகவே, அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய வளங்களை பாதுகாப்போம் என நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் பொய்யாக்கியுள்ளது.

அரசாங்கம் 5 வருட பதவி காலத்துக்குள் கொழும்பு துறைமுகத்தின் இரண்டு பிரதான முனையங்களை இந்தியாவுக்கும், சீனாவுக்கும் வழங்கும் என்பதை உறுதியாக குறிப்பிட வேண்டும். – என்றார்.

# இலங்கை மகப்பேறு மருத்துவ சங்கத்தின் 35 ஆவது தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்!



இலங்கை மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ சங்கத்தின் 35 ஆவது தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரதீப் டி சில்வாவை, அப்பதவிக்கு நியமிக்கும் நிகழ்வு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டப வளாகத்தின் தாமரை மண்டபத்தில் மேற்படி நிகழ்வு கடந்த (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

தெற்காசியாவில் தாய், சேய் இறப்பு விகிதம் மிகக் குறைந்தளவு பதிவாவது இலங்கையிலாகும். சுகாதார அமைச்சின் அனுசரணையில் இலங்கை மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ சங்கம் இந்த விடயத்தில் சிறப்பான பங்களிப்பை செய்து வருகிறது.

இலங்கை மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் 35ஆவது நிர்வாகத் தலைவரின் நியமனம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, முன்னாள் தலைவர் விசேட வைத்திய நிபுணர் யூ.டீ.பீ.ரத்னசிறி, செயலாளர் விசேட வைத்திய நிபுணர் சாமிந்த மாதொட உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சனியன்று மட்டும் 90 விபத்துக்கள்!

நாடளாவிய ரீதியில் கடந்த சனிக்கிழமை மாத்திரம் 90 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

மேலும் இந்த விபத்துக்களின்போது 9 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு, 50 பேர் சிறுகாயமடைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், வாகனங்களுக்கு மாத்திரம் சேதம் ஏற்பட்ட 21 விபத்துகளும் பதிவாகியுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் இதுவரையில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் சிக்கி 74 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 149 பேர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு, 607 பேர் சிறுகாயத்துக்கும் உள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 24 மணி நேரத்தில் 23 பேர் கைது!

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் கொவிட் - 19 சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக திங்கள் 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 23 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரை 2 ஆயிரத்து 98 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# 90 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தலில்!

இலங்கையில் சுமார் 90 ஆயிரம் பேர் தங்களது இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்ற உத்தரவிடப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக கடந்த (ஞாயிற்றுக்கிழமை) கருத்து வெளியிட்டுள்ள அவர், நாட்டில் காத்தான்குடி, அவிசாவளை, ருவன்வெல்ல உள்ளிட்ட ஒன்பது பொலிஸ் பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

மேலும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளைவிட்டு வெளியேற எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதுடன், அந்தப் பகுதிகளுக்கு வெளியில் இருந்து எவரும் உள்ளே செல்ல முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டின் வருடப்பிறப்பு நாள்களில் பொதுமக்கள் நடமாட்டங்களை கட்டுப்படுத்தி செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.


# கல்யாணமாலை

## வட சர்வதேச திருமண சேவை



| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1978.08.23 | பிறந்த திகதி - 1997.05.05 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - அச்சுவினி | நட்சத்திரம் - ரேவதி |
| செவ் - 7இல் | பாவம் - 19 1/4 |
| பாவம் - 22 | செவ் - 02இல் |
| கல்வி - A/L | கல்வி - A/L Bio |
| தொழில் - சொந்தக்கடை | தொழில் - IDM Computer Engineer |
| எதிர்பார்ப்பு - சாதாரண பெண் | எதிர்பார்ப்பு - UK, கனடா வெளிநாடு |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.01.2021 இல் வெளியிடப்பெற்றது.